1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 11-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை— பிரதிசதம் 10

## அம்மம்ம! அழிவின் பாதையிலே உலகம் செல்லுகின்றது

எமது பரிசுத்தபிதாவாகிய பாப்பரசர் அன்று உரோமர்களுக்கும், அவர்கள்மூலம் அகில உலகின் மாந்தர்கள் அனைவருக்குமே விடுத்த கண்டிப்பான எச்சரிப்பையும், எடுத்துக்கூறிய நன்மதிகளையும், அன்புடனே விடுத்துள்ள அழைப்பையும் சென்றகாவலனிலே தெரிவித்தபடி இதன்கீழ்தருகின்றோம்:

நாம் உங்கள் அன்புள்ளபிதா. உங்களைத்தட்டிஎழுப்பி இந்த வேளை எச்சரிக்குமுகமாக மிகுந்த ஆத்திரத்துடன் உங்களை அழைக்கும் குரலொலிக்குச் செவிசாயுங்கள். உலகமானது தன்னையேமறந்து, யாதும் யோசனையின்றியே கேட்டின் பாதையில் பறந்துசெல்லுகின்றது. அந்தப்பாதையோ, மனிதரின் ஆத்துமங்களையும், சரீரங்களையும், நல்லவர்களையும், தீயவர்களையும், சகலசாதிசனங்களையும், அவர்களின் நாகரீகங்களையும் பூண்டோடுஅழிக்கச் செல்லும்பாதையாகும். ஆகவே, மக்களே! இந்தவேளையிலே நாம் அசமந்தராய்இருந்து மௌனம் சாதிக்கவே முடியாது.

கொள்ளைநோய்களும், பூகம்பங்களும் பெருங்கெடுதிகள் விளைக்கும். ஆனால், உலகமாந்தர்களைத் தற்காலத்திலேதாக்கி வரும் தீமைகளோ, அவற்றிலும் ஆயிரம்மடங்கு கொடியன. அநேக ஆண்டுகளாக இத்தீமைகள் வளர்ந்துவருவதினால் மனிதரின் மனம் அவைகளைப்பற்றி அவ்வளவு சிந்திப்பதாய்இல்லை. அம்மட்டா! இந்தஅசமந்தமும், அக்கறையீனமுமோ மிகவும் கெட்ட ஓர்நோயின் அறிகுறியாகும். ஆனால், உள்ளபடியே உலகசம்பவங்களைச் சீர்தூக்கிப் பார்த்துச் சிந்திப்பவரெல்லாம் தாங்கள்பார்க்கும் அடையாளங்கள், காணும் அறிகுறிகள், மனுக்குலத்தை அந்தோ! தாக்கவிருக்கும் பயங்கர அழிவின் அடையாளங்களும், அறிகுறிகளுமெனக் கண்டுஅஞ்சுவார்கள்.

**அழிவின்பாதையிலே உலகம்செல்லுகின்றது.** நல்மனமுடையவர்கள் தீமையேநிறைந்த இந்தநாசகாலத்திலே, உலகமாந்தரைக் காத்துக் கேட்டின்பாதையில் நின்று அவர்களைத் திருப்பிக் கடைத்தேறப்பண்ணத் தங்களாலானதெல்லாம் செய்தல் வேண்டும். மனிதரைக்காத்து இரக்கங்கொண்டு இரட்சிக்கக்கூடிய சர்வேசுரன் அவர்கள் மீதுஇரங்கி அவர்களைக்காப்பதற்குத் தங்களாலான முயற்சி எல்லாம் செய்வது நன்மனமுடையவர்களின்மேல் சுமந்த கடன். ஏனெனில், உலகசரித்திரப்பரப்பிலே இப்பேர்ப்பட்ட கொடிய நாசகாலமும், கோலமும் முன்னர்எக்காலத்திலும் மனுக்குலத்தைத் தாக்கியிருந்ததாக எழுதப்பட்டில்லை.

பிள்ளைகளே! இதையிட்டு உங்களைப்பீடித்திருக்கும்— உங்களை மாளவடிக்கும் அசமந்தத்திலிருந்து உடனே விட்டுநீங்குங்கள். பரபரப்புடன் விழித்தெழ வேண்டிய நேரம்இதுவே. தாமதமே ஆகாது! ஆகாது! இடிந்து தகர்ந்து பாழாய்க்கிடக்கும் உலகம்முழுவதையுமே மறுபடியும் புதியதாய்க்கட்டி எழுப்பவேண்டும். அடிஅஸ்திவாரத்திலிருந்து எழுப்பவேண்டும். மிருகத்தன்மையைக்கொண்ட மனிதனை மறுபடியும் மனிதத்தன்மையுடையவனக்க வேண்டும். மனிதத்தன்மைபூண்டவனைஉயர்த்தி எழுப்பித் தேவபுத்திரனுக்க வேண்டும். அவனைத் தேவபிதாவின் இதயத்துக்கு உகந்தவனுக்கவேண்டும்.

ஆகவே, மனிதரின் எண்ணங்களையும், மனங்களையும், கிரிகைகளையும் தேவனுக்கு உகந்தவிதமாகப் புத்துயிர்பெறும்படியாய் அவர்களைத் தட்டிஎழுப்பிவிடப் பெரிதும் ஆத்திரத்தோடும், உங்களால்இயன்ற பிரயாசமெல்லாங்கொண்டும இப்போதே உடனேதானே தொடங்குவீர்களாக. இது உங்கள் ஒவ்வொருவருடையவும் பாரதூரமானகடமை. சகலகிறீஸ்தவர்களுடைய சீவியத்திலும் அவசியம் மறுமலர்ச்சி காணப்படுதல் வேண்டும். கிறீஸ்துவசீவியமானது, கிறீஸ்துநாதருக்கு உகந்தவிதமாய் முற்றும் புதுப்பிக்கப்பட வேண்டும். அதிலே ஒரு "மறுபிறப்பு"வேண்டும். சனசமூகநீதி, துய்யசீவியம், சன்மார்க்கமுறையும், ஒழுக்கங்களும்— இவை யாவும் கிறீஸ்துஇரட்சகரின் கட்டளைக்கிணங்க ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். இதற்காக யாவரும், யாவருமே உழைத்தல் வேண்டும்—குருமார், சனங்கள், அதிகாரமுடையவர்கள், குடும்பங்கள், சபைகள், கூட்டங்கள், சங்கங்கள்மாத்திரமல்ல, ஆனல், ஒவ்வொருவருமே செய்யவேண்டிய கடன் — புரியவேண்டிய தொண்டு இது.

எங்கள்சத்தியமறை ஸ்தாபிக்கப்படமுன் புராதன யுகங்களிலேயும் பற்பல கொடியதீமைகள் மனிதரைப்பாதித்தன. அவைகள்யாவும் அஞ்ஞான அந்தகாரத்திலுைம், அறியாமையினலும் எழுந்தனவேயாம். அந்த யுகங்களிலே இருந்தவர்கள் மனிதனின் நித்தியகதி எதுவென்பதையும், அதைஅடைவது எப்படிஎன்பதையும்பற்றி அறியாதிருந்தார்கள். ஆனல், தற்காலத்திலே உலகத்தைநாசமாக்கும் பயங்கரமான தீமைகளின் மூலவேர் ஆத்மஅசமந்தத்திலும், திடமில்லாதமனச்சித்தத்திலும், கல்நெஞ்சத்தனத்திலும், கடவுளைப் புறக்கணித்தலிலுமே ஊன்றிநிற்கின்றது. பிள்ளைகளே நாம்கூறும் இவைகளைக் கேட்டு ஒழுகுங்கள்!

— சூ. அ. —

## சூசையப்பர் அனுப்பிய வெகுமதி

அன்று பங்குனிமாதம் பத்தாம்நாள். அர்ச். சூசையப்பர் நவநாள்ஆரம்பதினம். வழக்கம்போல ஏழைகளின் சிறிய கன்னிகாஸ்திரீயாரின் கண்காணிப்பிலிருக்கும் அர்ச். சூசையப்பர் அனதைமடத்தில் பூசை முடித்துவிட்டு எனதுமனைவந்து சேர்ந்தேன். வண்டியைவிட்டிறங்கியதும் எனக்கு ஒரேஆச்சரியமாய்ப் போய்விட்டது. காரணம், வெளியில் போடப்பட்டிருந்த நாற்காலிஒன்றில் அமர்ந்திருந்த ஓர்உருவந்தான். அது என்பழைய கலாசாலைத் தோழன் செல்வராஜைப்போலிருந்தது. நான் காண்பது கனவா அன்றேல் நனவா என்ற ஐயம்எழுந்தது. மீண்டும்ஒருதரம் பார்த்தேன். எனதுஐயம் நீங்குவதற்குள் அவ்வுருவமே என்னிடம்ஓடி வந்து, 'சர்வேசுரனுக்குத்தோத்திரம் சுவாமி' என்று என்முன் முழங்காலிலிருந்து என்கரங்கள்இரண்டையும்பற்றி முத்தமிட்டது. ஆளை நன்ருகக் கவனித்தேன். ஆம், என்பழைய கலாசாலைநண்பன் செல்வராஜ்தான்.

இருவரும் கல்லூரிப்படிப்பை முடித்துப் பத்துவருடங்கள் ஆகின்றன. அதற்கிடையில் ஒருவரையொருவர் சந்திக்கவேயில்லை. படிப்பை முடித்தபிறகு செல்வராஜ் மலேயாசென்றுன். பங்குனிமாதம் 6-ந் திகதிதான் திரும்ப இந்தியாவந்தானும். வந்தவன் தனது பழைய சிநேகிதனை மறவாது எப்படியோ விலாசத்தை அறிந்துகொண்டு பார்க்கவந்துவிட்டான். நெடுநாளாகப் பிரிந்திருந்தநண்பர்கள் திரும்பவும் கூடுவதென்ருல் கேட்கவாவேண்டும்? எங்கள் கலாசாலைநாட்களைப்பற்றிய பழங்கதைகளைப் பேசினேம். சிரித்தோம். ஆனந்தக்கண்ணீர் உகுத்தோம். அதன்மேல் அன்றுஎன்னேடு விருந்துஅருந்தும்படி செல்வராஜைக் கேட்டுக்கொண்டேன். அவனும் இசைந்தான். மாலை தேநீர் அருந்தியபின் அவ்வூரிலுள்ள முக்கியஇடங்களுக்கு அவனை இட்டுச்சென்றேன். பார்க்கவேண்டியஇடங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியாகஏழைகளின் சிறியகன்னிகாஸ்திரீமார் நடத்தும் அனதைமடத்துக்குச் சென்றேம்.

மணியடித்தேன். தாயார்வந்தார். செல்வராஜை அவருக்கு அறிமுகமசெய்துவைத்தேன். பின்னர் மடத்தைச்சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். முதலில் செல்வராஜைக் கோவிலுக்குக் கூட்டிச்சென்றேன். அங்கு மேலும்கீழும், அப்பக்கமும் இப்பக்கமும் பார்த்துக்கொண்டே வந்தான் செல்வராஜ். நடுப்பீடத்தண்டை வந்ததும் அர்ச். சூசையப்பர்சுரூபத்தைச் சுட்டிக்காட்டி "அது என்ன?" என்று கேட்டான்.

"ஏன், தெரியவில்லையா? அர்ச். சூசையப்பர்" என்றேன்.

"அது தெரிகிறது; ஆனல், அவர்கழுத்தில் ஏதோதொங்குகிறதே; அதுஎன்ன?" என்று கேட்டான் செல்வராஜ். நானுந்தான் அர்ச். சூசையப்பர் சுருபத்தை எத்தனையோமுறை

— S. G. —

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## "சோல்லுக்குப் பஞ்சமில்லை"

— நியூயோக்

கம்யூனிஸ்தசீனுவிடமிருந்து அரிசி கிடைக்குமவிஷயமாக இதுவரை உருப்படியாக ஒருபலனும் இந்தியா பெருமலிருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டி, "நியூயோக் ரைம்ஸ்" தனது தலையங்கத்தில் பின்வருமாறு எழுதுகிறது. "இந்தியாவுக்கு அரிசிகொடுப்பதாகக் கம்யூனிஸ்தசீனு தடபுடலாக விளம்பரம்செய்தது. வார்த்தைகளை உண்ண முடியுமா? செஞ்சீனுவின் இந்தவார்த்தைகளுக்கு இன்னமும் பஞ்சம் வந்துவிடவில்லை. ஆனுல், உண்ணக்கூடிய அரிசியைத்தான் அதனிடமிருந்துகாணேம்." நிற்க, செஞ்சீனுவிலிருந்து அரிசிவாங்குவது இயலாதகாரியமென்று இந்தியபிரதமர் ஸ்ரீ நேரு கூறுகிருர். புதுடில்லியிலே உணவுமந்திரிகள் மகாநாட்டில் பேசுங்கால் அவர்குறிப்பிட்டதாவது: இந்தியாவின் உணவுப்பற்ருக்குறையைத் தவிர்க்கச் சீனுஉதவும்என்ற அறிகுறிகள்காணப்பட்டபோது அங்கே அரிசி வாங்கலாம் என்றநம்பிக்கை இந்திய கொள்வனவு ஏசன்றுகளுக்கு இருந்தது. ஆனுல் நடப்பிலே இந்தியாவுக்கு வேண்டியஅரிசி அங்குகிடைக்கவில்லை.

## அமெரிக்க எதிர்நடவடிக்கை

— வாஷிங்ரன்

சோவியற்ருஷியாவிலே அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுஅதிகாரிகளுக்குச் சுற்றுப்பிரயாணத்தடை விதித்திருப்பதைமுன்னிட்டு அமெரிக்காவில் சோவியற்நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும்உத்தரவை அமெரிக்க அரசாங்கம் பிறப்பித்துள்ளது. இதன்படி வாஷிங்ரன், நியூயோக்நகரங்களுக்கு 25 மைல் வட்டத்துக்குள்ளேயே சோவியற்அதிகாரிகள் இனி நடமாடலாம். சோவியற்அரசு தனதுநாட்டில் உள்ள அமெரிக்கஅதிகாரிகள் விஷயமாக வருங்காலத்தில் நடந்துகொள்ளும் விதத்தைப்பொறுத்து, இத்தடையைத் திரும்பவும் பரிசீலனைசெய்யத் தயாராயிருப்பதை அமெரிக்கஅரசாங்கம்அறிவித்துள்ளது. ஐ. நா. சம்பந்தமாக இங்குவேலைசெய்யும் சோவியற் பிரசைகளை (குடும்பத்தோடுள்ள இவர்கள்எண்ணிக்கை 144.) இந்தத்தடையுத்தரவு பாதிக்காது. தடையினுல் பாதிக்கப்படுபவர் எண்ணிக்கை 257.

## புதிய மஸ்கோ மாநாடு

— வாஷிங்ரன்

அமெரிக்காவில் ஆகச்செல்வாக்குள்ள சுதந்திர தொழிற்சங்கங்களில் ஒன்ருன அமெரிக்கதொழிற்சங்க சமஷ்டியின் அக்கிராசனர் ஸ்ரீ வில்லியம் கிறீன்அவர்கள் மஸ்கோவில் நடக்கவிருக்கும் "சர்வதேச பொருளாதார மாநாடு"என்பது சுதந்திர உலகில் குழப்பத்தையும், பிளவையும் உண்டுபண்ணக் கம்யூனிஸ்தார்கள்செய்யும் இன்னெருசூழ்ச்சியே என்கிருர். கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்தின் தயவில்நடக்கும் இம்மாநாட்டுக்கு வருமாறு கிடைத்தஅழைப்பை மறுத்து அனுப்பியுள்ள கடிதத்தில்தான் அவர் மேற்கண்டவாறு கண்டிக்கிருர். சர்வதேச யந்திரதொழிலாளர்சங்க அக்கிராசனரும் மஸ்கோ அழைப்பை மறுத்துவிட்டார். ருஷியஆதிக்கத்திலுள்ள நாடுகளிலே கம்யூனிஸ்தார்கள் கைப்பற்றிக்கொண்ட அல்லது சிருஷ்டிசெய்த தொழிற்சங்கங்களுக்கும், சுயேச்சையாகஉருவாகிச் சுதந்திர உலகில் தொழில்சமூகத்துக்குப் பணிபுரிகின்றதொழிற்சங்கங்களுக்கும் ஒருவிதமானதொடர்பும் இல்லைஎன்பதை இவர் தமதுமறுப்புக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கோறிய கம்யூனிஸ்தர்கள் சுமத்தும் அபாண்டம்

—சான் அந்தோனியா (டெக்சாஸ்)

கோறியாவிலே ஐ. நா. படைகள் "நோய்க்கிருமி பரப்பும்" போரைத் தொடுத்ததாகக் கம்யூனிஸ்தார்கள் சாட்டும்குற்றமானது அவர்களால் தங்கள் படையினரிடையே பரவிவரும் தொற்றுநோய்களைத் தடுக்கக் கையாலாகாமல் இருக்கும்நிலைமையை மறைக்கவேஎன்று கம்யூனிஸ்த படையணிகளிடையேநிலவும் சுகாதாரநிலையைப் பரிசீலனைசெய்துள்ள நால்வர் கோஷ்டியின் தலைவர் பிறிகேடியர் ஜெனறல் றெபேட் ஈ. சாம்ஸ்அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். கம்யூனிஸ்தார்களின் குற்றச்சாட்டைச் "சுத்தஅபத்தம்", "முற்றிலும்ஆதாரமற்றது"என அமெரிக்க வெளிநாட்டு மந்திரியார் டீன் அச்சிஸன் அவர்கள் ஆதாரபூர்வமாக மறுதலித்திருக்கிருர். கம்யூனிஸ்தார்கள் தங்கள் குற்றச்சாட்டைப் பாரபட்சமற்ற பரிசோதனைக்கு விடத் தயாரா? என்றும் அச்சிஸன் கேட்டிருக்கிருர்.

இதற்கிடையிலே கோறியாவில் கம்யூனிஸ்தார்கள் தங்கள்போர்வீரர்களுக்குக் கொடுக்கின்ற உணவுபற்றிய மோசடி அம்பலமாகியிருக்கிறது. கம்யூனிஸ்த போர்வீரர்களிடையே தொற்றுநோய்களைப்பரப்பும் 'அழுகிய' உணவுப்பதார்த்தங்கள் கம்யூனிஸ்த சீனுவிலிருந்துசெல்வதைப் பிரபல கம்யூனிஸ்த பத்திரிகைகளே கண்டித்திருக்கின்றன. நல்லமாமிஷத்துடன் "பாடாவதிக் குதிரைமாமிஷத்தை"க் கலந்து பெட்டிகளில்அடைத்து அனுப்பிய ஷாங்காய்வியாபாரி அகப்பட்டதன் வரலாறும் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. அழுகின முட்டைகளும், பூஞ்சக்காளான்பிடித்த அரிசியும் கோறியகம்யூனிஸ்தபோர்வீரர்களுக்கு அனுப்பப்பட்டசெய்திகள் இதரசீனப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

## ஆஸ்திரியா அழுவதேன்?

— நியூயோக்

மற்ருெருநாட்டின் பொருளாதார மூலவளத்தின்மீது சோவியற் கம்யூனிஸ்த அதிகாரபீடம் கைவைக்கும்போது, என்னவிதமானசுரண்டல் நடக்கிறதுஎன்பதற்குச் சோவியற் ஆதிக்கத்திலுள்ள ஆஸ்திரியாவின் நிலைமை தக்கதோர் எடுத்துக்காட்டாகும். இரண்டாவதுமகாயுத்தம் முடிந்தபிறகு 471 ஆஸ்திரியஉற்பத்திஸ்தாபனங்களைச் சோவியற் அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. இந்தஉற்பத்திஸ்தாபனங்களில் 351 தொழிற்சாலைகளும், வர்த்தகசாலைகளும்ஆகும். இவ்வாறு வீயன்ஞநகரிலுள்ள "நியூயோக் ஹறல்ட் ரிறிபியூன்" பத்திரிகைநிருபர் தகவல்அறிவிக்கிருர். அவர் மேலும் எழுதுவதாவது:

கம்யூனிஸ்த ஆஸ்திரியாவிலுள்ள தொழில்ஸ்தாபனங்களைச் சோவியற் அரசாங்கம் சுயநலத்துக்காகச்சுரண்டுகிறது. இந்தத்தொழில்ஸ்தாபனங்கள் தனிப்பட்டவர்கள் கைகளிலிருந்து பிடுங்கப்பட்டுச் சோவியற் அரசாங்க ஏகபோகத்தின்கீழ் இப்போது இருக்கின்றன. இப்படிச் சோவியற்அரசு நடத்தும் $12\frac{1}{2}$ கோடி டலராகிய வருடமொத்த வியாபாரத்தில் 1 கோடியே 90 லட்சம்டலர் இலாபத்தைத் தட்டிக்கொண்டுபோகிறது.

சோவியற்சுரண்டலில் பட்டவர்த்தனமாகத் தெரிவது ஆஸ்திரிய எண்ணெய்க்கிணறுகளில் கம்யூனிஸ்தார்கள் கைவைத்திருப்பதுவே. சோவியற் ஆஸ்திரியபகுதியில் 1945-ம் ஆண்டுக்குப்பிறகு ஒவ்வொருவருடமும் 4 கோடி டலர் பெறுமதியுள்ள எண்ணெயைக் கிறெம்லின் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனுல், ஆஸ்திரிய அரசாங்கத்துக்குத் துளிகூட உபகாரம் இல்லாதபடி சோவியற் ஆதிக்கம்செய்துள்ளது. அதன்காரணமாக மெக்சிக்கோவிலிருந்தும், பார்சிகத்திலிருந்தும், வெனிஸுலாவிலிருந்தும் தனது எண்ணெய்த்தேவைகளை ஆஸ்திரியா இறக்குமதிசெய்யும் நிர்ப்பந்தத்துக்கு இலக்காகியிருக்கிறது. இப்படி வெளிநாடுகளிலிருந்து ஆஸ்திரியா இறக்குமதிசெய்யும் எண்ணெயின் பெறுமதி வருடத்துக்கு 1 கோடியே 80 லட்சம் டலர்.

ஆஸ்திரிய சமாதானஒப்பந்தம் நிறைவேருதபடி ருஷியா தடுத்துவரக்காரணம், தொடர்ந்து அந்நாட்டில் பொருளாதாரச்சுரண்டலை நடத்தவழியில்லாமற் போகக்கூடாதேஎன்ற சுயநலம்தான்.

# சுதேச வர்த்தமானம்

## சங். சோக்ஸி நீதியாசர்

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே தற்போது விசாரணைநடத்தி வருகிறவரான சங். என். கே. சோக்ஸி நீதியரசர் இவ்வாரஇறுதியிலே கொழும்புக்குச் செல்ல, அவரிடமாகச் சங். சுவான் நீதியரசர்வந்து விசாரணையைத் தொடர்ந்து நடத்துவாரென அறிகின்ருேம.

## கிராமச்சங்க தேர்தல்கள்

வருகிறஆனிமாதம் 30-ந்திகதியுடன் முடிவடையவிருக்கும் 240 கிராமச்சங்கங்களின் பதவிகாலம் அடுத்துநிகழும் 1953-ம்ஆண்டு ஆனிமாதம் 30-ந்திகதிவரை நீடிக்கச்செய்து விடப்பட்டிருப்பதாகச் சென்ற திங்கட்கிழமைஇரவு வெளியான விசேஷகெசற்றிலே பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணத்தில் நடந்தேறிவரும் சுப்பிறீங்கோட்டிலே முதலாவதாய், வட்டுக்கோட்டைக் கொலைசெய்ய எத்தனித்தவழக்கு விசாரணைக்குவாலாயிற்று. இதிலேஆறுமுகத்தான் சண்முகத்தான்என்னும் ஒருவன் மூளாயைச்சேர்ந்த முத்தன் கிட்டிணனைச் சென்றவருடம் ஆவணிமாதம்4-ந்திகதியன்று ஓர்கத்திகொண்டு வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தான். விசாரணையின்போது, எதிரி அபாயகரமான ஓர் ஆயுதங்கொண்டு கடுங்காயம்விளைத்ததில் தான்குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் நான்குவருடக் கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

இரண்டாவதாய், அடம்பனைச் சேர்ந்த செகப்ப செய்பது என்பவன் சென்றவருடம் ஆடிமாதம்6-திகதியன்று அவ்வூரைச்சேர்ந்த சந்தனம் என்பவனைக் கொலைசெய்தானென்று தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குவந்து எதிரி கைபிழைபாட்டுக் கொலைக்குற்றவாளியாகி எட்டுவருடக் கடுமூழியசிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

மூன்ருவதாய், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முடியர் அவருூம்பிள்ளை, சின்னையா சூசைப்பிள்ளை எனும்இருவர் சேர்ந்து சென்றவருடம் பங்குனிமாதம் 10-ந் திகதியன்று தாண்டவன் றிஸீவிங் போஸ்றமாஸ்றரான ரி. எம். சிவப்பிரகாசம்என்பவரைக் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்குவந்து, முடிவில் எதிரிகள்இருவரும் நான்குவருடநன்னடத்தைப்பிணையில் போகும்படிதீர்க்கப்பட்டனர்.

நான்காவதாய், தாவடிக்கொலை வழக்கு விசாரணைக்குவரலாயிற்று. இதிலே பொன்னுத்துரை நல்லையா எனும்ஒருவன் நாகமுத்து கந்தையாவைக் குற்றிக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்டவழக்கு நான்குதினங்களாக விசாரணைசெய்யப்பெற்றபின் யூரிமாரின்தீர்ப்பை நீதியரசர் ஒப்புக்கொள்ளாமையால் வேறுயூரிமார் முன் எதிரி மறுபடி விசாரணைசெய்யப்படவேண்டுமெனத் தீர்ப்பாயிற்று.

## நால்வரின் துணிகரபிரயாணம்

கலிபோணியாஎனும் 27தொன்நிறைகொண்ட பாய்க்கப்பலிலே உலகம் சுற்றிவருகின்ற நான்குஅமெரிக்கர் தங்கள்நாயுடன் இலங்கைவந்துசேர்ந்து தற்போது கொழும்பிலே தங்கியிருக்கின்றனர். இற்றைக்கு மூன்றுவருடங்களின்முன் இவர்கள் அமெரிக்கஐக்கியதேச லொஸ் ஆஞ்சேல்ஸ் நகரிலிருந்துபுறப்பட்டு இதுவரை 22,000 மைல்தூரம் கடற்பிரயாணஞ் செய்துள்ளனர். கொழும்பிலிருந்து இவர்கள் செங்கடல், மத்தியதலாக்கடல், பனமாக்கால்வாய்வழியாக மேலும்13,000 மைல் பிரயாணஞ்செய்து இன்னும் ஒருவருடத்திலே அதாவது வருகிற 1953-ம்ஆண்டு பங்குனிமாதம் திரும்பவும் லொஸ் ஆஞ்சேல்ஸ் நகர்போய்ச்சேர எண்ணியிருக்கின்றனர். அப்போதுஇவர்கள் நான்குவருடம் கடலிலேபிரயாணஞ்செய்து 35,000மைல் தூரம் தாண்டியிருப்பார்கள். இவர்களிலே கப்பலின்தலைவர் ஓர்இஞ்சினியர். மற்ருெருவர் பிரதிமைப்படம் பிடிப்பவர். தங்கள் 22,000 மைல் தூரப் பிரயாணத்திலும் 5,000அடிநீளமான சினிமாப்படங்களை இவர்கள் பிடித்திருக்கின்றுர்கள்.

## அதிகமான நெல்விளைவு

வடமத்தியமாகாணத்திலே சென்ற மகாபோகத்தில் நெல்பெருந்தொகையாக விளைந்திருக்கிறது. அதனுல்கமக்காரர் ஆறுலட்சம்புசல்நெல்லை அரசினருக்குவிற்க முன்வந்துள்ளனர். அரசினர் இத்தனைபுசல்நெல்லையும் வாங்குவதற்கான ஒழுங்குகள்செய்து ஏலவே மேலதிகமான கொள்வனவுநிலையங்களை அமைத்து, இவ்வாரமுதல் புசல் ஒன்று 9ரூபாவீதம் உத்தரவாதவிலையில் நெல்வாங்கத்தொடங்கியிருக்கின்றனர். வடமத்தியமாகாணத்திலே இம்முறை பன்னிரண்டுலட்சம்புசல் நெல்வரையில்விளைந்திருப்பதாக அரசாங்க காணிஅபிவிர்த்தி அதிகாரி ஒருவர் அறிவித்திருக்கின்றுர்.

## விடுமுறையும், வியாபாரமும்

ஈஸ்றர்விடுமுறைநாட்களிலும், சிங்கள-தமிழ்வருடப்பிறப்பு விடுமுறைநாட்களிலும், வங்கிவிடுமுறைநாட்களிலும் யாதேனும் மாற்றம்செய்யப்பட்டாலன்றி மற்றப்படி, கொழும்பிலே வர்த்தகமுயற்சிகள் கடுமையாகப் பாதிக்கப்படுமென்று வர்த்தகதலைவர்கள் கூறுகின்றுர்கள். ஏனெனில். சித்திரை 10-ந்திகதிமுதல் 18-ந்திகதிவரையிலே வங்கிகள்தொடர்ந்து மூடப்படவிருப்பதானது இலங்கையின் வெளிநாட்டு வியாபாரத்தைப் பாதிப்பதாகும். அதனுல், சித்திரை 16-ம் 17-ம் திகதிகளின் வங்கிவிடுமுறைநாட்கள் மாற்றப்படவேண்டுமென்று வர்த்தகசங்கம் அரசினைக்கேட்டிருக்கிறது.

## ஆற்றில்விழுந்த வான்

சென்றவெள்ளிக்கிழமை புத்தயாத்திரிகர்களைஏற்றிச்சென்ற வான்ஒன்று இரத்தினபுரிக்குச் சமீபமான கஹராகாமஎனுமிடத்திலே ஓர்முடக்கால் திரும்பியபோது விபத்துக்குள்ளாய்ப் பாதையைவிட்டுவிலகி 20அடிமுதல் 30அடிவரையில் ஆழமான ஓர்பள்ளத்தில்இறங்கிக் காலுகங்கைஆற்றில்மூழ்கியது. அதிலே சென்றயாத்திரிகர்களில் வெலெனிஸ் ஹாமிஎன்பவர் அவ்விடத்திலேயேஇறந்தனர். வேறுஎட்டுப்பேர் கடுாகாயமடைந்து இரத்தினபுரி ஆஸ்பத்திரிகொணடுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சவேரியாரின் திருமேனிக்காட்சி

கருதினல்மார் திருச்சங்கதலைவரும், கீழைத்தேசங்களின் திருச்சபைத்திருச்சங்க காரியதரிசியுமான கருதினல் திசறென்ற் ஆண்டவர் அர்ச். சவேரியாரின் திருமேனிக்காட்சியை முன்னிட்டு வருகிற மார்கழி மாதம் கோவைநகருக்கு வரும்போது, வேறுவேறன மூன்று திருச்சடங்காசாரமுறைகளிலும், மூன்று பாஷைகளிலும் திவ்விய பூசைகள் நிறைவேற்றுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவர் லத்தீன்திருச்சடங்கு ஆசாரமுறையைச்சேர்ந்தவர். ஆனல், இப்போது சீரிய-மலையாள திருச்சடங்குஆசாரமுறையிலும், சீரிய-மலான்கர திருச்சடங்கு ஆசாரமுறையிலுமுள்ள செபப்புததகங்களுடன் பரிசயமுற்று வருகிருரெனச் செய்திவநதிருக்கிறது. இந்தியகத்தோலிக்கரில் ஒரு பெருந்தொகையானேர் இவ்விரு திருச்சடங்காசார முறைகளையும் சேர்ந்தவர்கள்.

### ருமேனிய மேற்றிராணிமார்

ருமேனியநாட்டின் ஆறுமேற்றிராணிமார் கம்யூனிஸ்த சிறைச்சாலைகளிலே இறந்துவிட்டதாகவும், கொல்லப்பட்டிருப்பதாகவும் ஆஸ்திரிய மக்கள் (கத்தோலிக்க) கட்சி அறிவித்திருக்கிறது. இவர்களிலே அல்பாயூலியாநகரின் மாட்ரன் மேற்றிராணியார் கொடியவேதனைக்குள்ளானபின் சிறைச்சாலையில் இறந்துபோயினரென நம்பப்படுகிறது. லுகோஜ்நகரின் பாலன்மேற்றிராணியார் சிறைவைக்கப் பெற்றிருந்தபோது கொலைசெய்யப்பட்டாரெனத் தெரியவருகிறது. மாட்ரன்மேற்றிராணியார் சிறைவைக்கப்படுமுன் ருமேனியாவிலே கம்யூனிஸ்தஆட்சியை வெளிப்படையாகச் சண்டவேகத்துடன் கண்டனஞ்செய்தவர்களில் ஒருவர். டான்யூப்-கருங்கடல் கால்வாயில் வேலைசெய்யும்போது ஏற்பட்டவிபத்துக் காரணமாக ஓர் மேற்றிராணியார் மரணமாயினர்.

### தூரவருக்கு இரத்தஉபகாரம்

யப்பானிலே சாய்ஜோஎனுமிடத்திலே வண. டொமினிக் லெடெஸ்மா சுவாமியார் 1950-ம் ஆண்டு ஆடிமாதம் 2-ந்திகதி ஓர் புதியவிசாரணைப்பங்கை அடியிட்டார். அப்போது அங்கு ஐந்துகத்தோலிக்கர் மாத்திரமே இருந்தனர். அதன்மேல் இதுவரை 38 பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். வேறும் 60 பேர் தற்போது வேதசத்தியங்கள் படித்துவருகின்றனர். தங்கள் பங்குக்குரவரான அந்தஸ்பானிய சுவாமியார் கடினநோய் கண்டிருப்பதாகவும், பிறரிலிருந்து இரத்தம் எடுத்து அவர் சரீரத்தில்செலுத்த வேண்டியஅவசியம்ஏற்பட்டிருக்கிறதென்றும் சமீபத்திதேஅங்கு செய்திபரந்தபோது அவருக்குத் தங்கள் இரத்தத்தை உதவும் உரிமையைப் பெற்றுக்கொள்ள இருபதுபேர் முன்வந்தார்கள். இவர்களில் ஏழுபேரின் இரத்தமே தகுதியானதென்று டக்றர்மார் கண்டறிந்து அவர்களிடமிருந்து இரத்தம்எடுத்து அவர் சரீரத்தில் செலுத்தினர். இப்போது சுவாமியார் குணமடைந்திருக்கிருர்.

### முத்திப்பேறு பெற்றபட்டம்

அடுத்தவைகாசி, ஆனிமாதங்களிலே மூன்று முத்திப்பேறுபெற்ற திருப்பட்டங்கள் அருளப்படுதற்கான ஒழுங்குகளைத் திருச்சடங்காசார திருச்சங்கம்செய்து வருகின்றது. ஆசிரியத்தொண்டாற்றும் வெனெறினிய கன்னிகாசபையை அடியிட்ட ஆசா. ரேஸ் வெனெறினி கன்னியாஸ்திரி வைகாசி 4-ந்திகதியும், திருஇருதயநாதரின் பணிப்பெண்களசபையை அடியிட்ட ஆசா. இறப்பாயெலா மரியாகன்னியாஸ்திரி வைகாசி 18-ந்திகதியும், திருஇருதயநாதரின் அர்ச். டொரேத்தி அம்மாளது ஆசிரியகன்னியாஸ்திரிகளில் ஒருவரான ஆசா. மரியா பொஸ்காடின் கன்னியாஸ்திரி ஆனி 1-ந்திகதியும் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளபபடுவார்கள். இம்மூன்று தினங்களும் ஞாயிற்றுக்கிழமைகளாகும்.

### பிரபுவும் லூர்துபதியும்

பிரித்தானியபேரானசேனபதியாகிய பீல்ட் மாஷல் மொண்கோமெறி பிரபுஅவர்கள் சமீபத்திலே லூர்துபதியைத் தரிசித்து அங்குஇருமணிநேரம தங்கித் திருமடலாயினர். அங்கு திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ் செய்து வைக்கபபட்டிருந்தபோது, அவர் முழந்தாட்படியிட்டுச் சற்பிரசாத ஆசீர்வாதம் முடிகிறவரையில் அந்தப்படியே முழந்தாளில் இருந்தார். அப்போது அப்பதியில் சமுகமாயிருந்த கத்தோலிக்கர் அவரை இன்னரென அறிந்துகொண்டு அவருடைய கருத்துக்காக மூன்று பிரியதத்தமந்திரம் செபித்தார்கள். அப்போது பிரபுவுக்குண்டான மனவருட்சியோ சாற்றுந்தரமன்று. ஓர் புறொட்டஸ்தாந்தரான மொண்கோமெறிபிரபு தம்முடைய லூர்துபதித் தரிசனையைப்பற்றிப் பிந்தப்பேசியபோது, தம்முடைய "மகாஉறுதிவாய்ந்த சமயஅனுபவஞானம்"என வர்ணித்துக்கூறித் தாம் அத்திருப்பதிக்கு யாத்திரைசெய்த நோக்கத்தையும் தெரிவித்துநின்ருர்.

### ஹிற்லர் பிரதிநிதியின் புதல்வர்

ஹிற்லரின் பதிலாளியாயிருந்து காணமற்போன போர்மன் என்பவரின் புதல்வரான 25 வயதுடைய மாட்டீன் போர்மன் என்பவர் ஆஸ்திரியாவிலே பெடரேன் எனுமிடத்திலுள்ள திருஇருதயநாதரின் மிஷனரிகுருமார் சபையிலே ஓர் நவசந்நியாசியாகச் சேர்ந்திருக்கின்ருர். ஜேர்மனியிலே ஹிற்லரின் நாஸிய ஆட்சி நடைபெற்ற காலத்திலே கத்தோலிக்க திருச்சபையின் மகாகொடிய சத்துருவாயிருந்த ஓர் மனிதரின் புதல்வர் தனது சந்நியாசஅந்தஸ்திலே அதிகம் மனப்பாக்கியமாயும், அதிகம் பக்திவைராக்கிய முடையராயும் இருந்துவருகிருரென என். சி. டபிள்யு. சி. என்ற செய்திச்சேவையின் நிருபரான வண. டக்றர் மாக்ஸ்யோர்டான் சுவாமியார் அறிவித்திருக்கின்ருர். ஐந்துவருடங்களுக்குப்பின் குருப்பட்டம் பெற்றதன்மேல் வேதபோதகநாடு ஒன்றுக்கு ஓர் மிஷனரியாகத் தாம் அனுப்பப்படுவாரென அவர் நம்புகின்ருர். இவர் தந்தையார் ஹிற்லரின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது முதல் காணமற்போயினர். அவர் ரோமாபுரியிலுள்ள சந்நியாசமடம் ஒன்றில் மறைந்திருக்கிருரெனச் சமீபத்திலே வெளிவந்தசெய்தி பொய்யென மறுக்கப்பட்டிருக்கிறது.

## தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின்

# தபசுகால நிருபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தபசுகாலம், நமது சீவியத்தின் கடைசித் தபசுகாலம். போன வருடம் தபசுகாலத்தில் மலைபோலிருந்தவர்கள் இந்த வருடம்இல்லை, மறைந்து போனர்கள். இந்தவருடத் தபசுகாலம் எத்தனைபேருக்குக் கடைசித் தபசுகாலமாய் இருக்குமோ தெரியாது. ஒவ்வொருவனும் எனக்கு இந்தவருடத் தபசுகாலம் கடைசித்தபசுகாலமாய் இருக்கலாமென்று அதைத் தொடக்கவேண்டும். இதை வாசிக்கக்கேட்கும் கருங்கல்லினும் கடினமானநெஞ்சுளளவர்கள் சொல்வார்கள: "இதெல்லாம் எங்களுக்குப் பழையகதை; இந்த உருட்டுப்புரட்டு மிரட்டல்களுக்கெல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம்." இப்படி வீரியம்பேசுகிறவர்களே! விபூதிப் புதன்கிழமை குருவானவர் உங்கள் நெற்றியில சாம்பலைப்பூசி: ஓ! மனிதா! நீ மண்ணய் இருக்கிருய். திரும்பவும் மண்ணய்ப் போவாய் என்பதை நினைவு, கூருஎன்று சொல்லும்போது நான ஒருநாள்சாவேன், செத்தபிற்பாடு என்கதி என்னவாய்ப் போகுமென்று தியானிக்கிருயா?

லூசிப்பிசாசு தான்கெட்டது மல்லாமல், மற்றும்அநேக சம்மனசுகளையும்கெடுத்து நரகத்துக்கு இழுத்துக்கொண்டது போல், சிலஊர்களில் லூசிப்பிசாசுக்குச் சமானமான துஷ்டர்கள் இருக்கலாம். தாங்கள் நரகத்திற்குப் போகிறதுமல்லாமல், மற்றும்அநேகரையும் தங்களோடு இழுத்துக்கொண்டு போகவேண்டுமென்று முயற்சிக்கலாம். சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டுஅகன்று நித்தியநரக நெருப்பில போங்கள்என்று கோப நீதிபரன் முழங்கும்போது இப்பாவிகள் என்ன சொல்லுவார்கள்?

அணுவளவுவிசுவாசமும், கிஞ்சித்தேனும் தெய்வபயமும் இல்லாத கிறீஸ்தவர்கள் மெய்யான கிறீஸ்தவவர்கள் அல்ல. ஆட்டுத்தோலைப் போர்த்திக கொண்டிருக்கும் ஓநாய்கள். வடிகட்டினடி பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள்.நாஸ்திகர்கள். இன்று இவர்கள் ஆண்டவருடைய குரற்சப்தத்தைக் கேட்டால், தங்கள் இருதயங்களைக் கடினமாக்க வேண்டாம்.

"இப்பொழுது அழுகையாலும், பிரலாபத்தாலும உங்கள் இருதயத்தோடு நம்மிடம்திரும்பி வாருங்கள் என்கிருர் எமது நல்ல ஆண்டவர். உங்கள் வஸ்திரங்களைமாத்திரமல்ல, உங்கள் இருதயங்களையும் மனஸ்தாபத்தாலகிழித்து உங்கள்தேவனுகிய ஆண்டவரிடம் திரும்புங்கள். ஏனெனில், அவர்நல்லவர்,இரக்கமுள்ளவர், பொறுமையுள்ளவர், மிகுந்த தயையுடையவர். தீமைமீது பச்சாததாபம் கொணடவர். ஆதலால், சீயோன்மீது எக்காளத்தை ஊதுங்கள். பரிசுத்தஉபவாசத்தை ஏற்படுத்துங்கள. சபையைக்கூட்டுங்கள். தேவாலய முன்மண்டபத்திற்கும், பீடத்திற்கும் நடுவில் நின்று கண்ணீர்உகுத்து, பொறுத்தருளும் கர்த்தாவே, உமது சனங்களின்பாவங்களைப் பொறுத்தருளும். உமது சுதந்தரப் பிரசையைப் புறசாதிசனத்தின் வசைக்கு உள்ளாயிருக்கவிடாதேயும். அவர்கள் தேவன் எங்கே? என்று அந்நியசனம் அதைப்பரிகசிக்க விடாதேயும்" என வேண்டுவார்கள். (ஜோயேல் 2-ம் அதி.)

அன்பார்ந்த பிள்ளைகளே! இக்காலத்தில் கண்ணல்கண்டதையும், காதால்கேட்டதையும் கையால்தொட்டதையும் மாத்திரம் நாங்கள்நம்புவோம்; மற்றும்எதையும் நம்பமாட்டோம் என்று சலஞ்சாதிக்கிற அறிவிலிகள் அனந்தம்பேர். இவர்களுக்குள் எவனகிலும் சாவைக் கண்டது யார்என்று சொல்லத்துணிவானே? சிலவருடங்களுக்குமுன் ஐரோப்பாக் கண்டத்தைக் கிடுகிடுக்கச்செய்த ஹிற்லர்எங்கே? முசோலினி எங்கே? நமது தாய்நாட்டுக்குச் சுதந்தரங்கொடுத்த தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் எங்கே? நேற்றுஇருந்தவர்கள் இன்றைக்கில்லை, இன்றைக்கிருந்தவர்கள் நாளைக்கில்லை. இக்காலத்தில் சடுதிமரணம் சர்வசாதாரணம். நெஞ்சடைப்பு, மார்அடைப்பு, இரத்தத்துடிப்பு, மோட்டார்விபத்து, விமானவிபத்து,வண்டிவிபத்து, கப்பல்விபத்து, நெருப்புவிபத்து, புசல்விபத்து இவைமுதலிய விபத்துக்களை அன்றாடபபத்திரிகைவாயிலாய் நாம்வாசிக்கிருேமன்ருே!

பிரித்தானியதேசத்து ஆரும் ஜோர்ஜ்மன்னர் மாசி 5-ந்தேதி இரவு வழக்கம்போல நித்திரைக்குச் சென்ருர். மறுநாட்காலை காவல்காத்திருந்த ஊழியன் அவரைஎழுப்பப் போகும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

### 1. பாடசாலைத் தவணை மாற்றம்

நமதுபாடசாலைகளின் முதலாந் தவணை 31–3–52–இல் முடிவாகி இரண்டாந்தவணை 28–4–52–இல் ஆரம்பமாகும் என்று தலைமைஆசிரியர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

### 2. ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

ஆசிரியர்களின் வருடாந்த ஞானவொடுக்கம் கொழும்புத்துறைத் தாபனத்தில் வருகிற சித்திரைமாதம் 1-ந் திகதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் தொடங்கிச் சித்திரைமாதம் 5-ந் திகதி சனிக்கிழமைகாலை முடிவாகும்.

மருதமடுத் திருப்பதியில் நடந்த ஞானவொடுக்கத்தில் பங்குபற்றாத ஆசிரியர்கள்அனைவரும் இதில் பங்குபற்றுவார்கள்என எதிர்பார்க்கிறோம்.

இந்தஞானவொடுக்கத்தில் பங்குபற்றவிரும்பும்ஆசிரியர் கூடியவிரைவில் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கும் இந்த ஞானவொடுக்கத்தில் பங்கு உண்டு என்று நினைவூட்டுகிறோம்.

T. A. J. Mathuranayagam,
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 10-3-52

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
பங்குனிமாதம் 20-ந் திகதி

## தேர்தல் ஆயத்தம்

அடுத்த பாராளுமன்றப் பொதுதேர்தல் வருகிறஆனியில், இன்றேல் வருகிறஆவணியில், சிலவேளை அதிகம்பிந்தி அடுத்த வருடத்திலே தைமாதத்தில் நடைபெறுமென்று பலரும்பலவாறாகக் கருத்துக்காட்டி வருகின்றனர். பிரதமரோ இதனைப்பற்றித் தமதுபிரியமனைவியாருக்குமே எதுவும் தெரிவிப்பார்போல்இல்லை. எதற்கும் "தயாராய்" இருந்தால் பொதுத்தேர்தல் எப்போது நடைபெற்றாலும் சரிதான். "தயாராய்" என்றோம். ஆம், பொதுத்தேர்தல்என்பது ஓர் பாரதூரமானகருமம். ஏனெனில், ஓர் நாட்டின் நல்ஆட்சிச்சிறப்பும், அந்நாட்டுமக்களின் நல்வாழ்க்கைச்சிறப்பும் அதிற்றான் தங்கியிருக்கின்றன. பொதுமக்கள் சகலகாரியங்களையும் சீர்தூக்கிச் சரிவர ஆராய்ந்து தகுந்தபிரதிநிதிகளை—சிறந்த அரசியற் கொள்கைகளைக் கடைப்பிடித்துள்ள பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்புமிடத்து, நல்லாட்சியும், நல்வாழ்க்கையும் ஏற்பட வழியுண்டாகும். அதனால், தமிழ்மக்கள் அனைவரும் பொதுத்தேர்தல் விஷயமாய்ப் போதியகரிசனைஎடுத்து அதற்குத் தங்களை ஆயத்தஞ்செய்ய வேண்டும். அவ்வாறுசெய்யாது அதுதான் நமக்கென்ன, இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, கூடவந்த குரககினம் ஆண்டாலென்னவென்றுவாளாவிருந்துவிட்டுப் பின்னர் வந்தபின்காப்பவன்போன்று கருமஞ்சாதிப்பது அசாத்தியமாகும்.

நாம் இவைகளை வரைவதாலே ஒரு கட்சிக்குச் சாதகமாகவும மறுகட்சிக்குப் பாதகமாகவும் இருக்கிறோமென்று எவருமே கருதிவிடப்படாது. அந்தந்தக் கட்சிகளையும், அவற்றின் கொள்கைகளையும்குறித்து அறிஞர்பலரும் எடுத்துக்காட்டியவைகளையே நாமும் எடுத்தாண்டு அவைகளைத் தமிழ்மக்களின் ஆராய்ச்சிக்கும், ஆலோசனைக்கும்விடுவதே இன்றுள்ள நமது குறிக்கோளாகும். தமிழரின் அரசியல்வானத்திலே நவமாகமுளைத்துப் பொதுத்தேர்தலில்போட்டியிடமுன் வந்திருக்கும் தமிழரசுக் கட்சியைப்பற்றி முந்தஆராய்வாம. பாராளுமன்றத்திலே வவுனியாப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. சி. சுந்தரலிங்கம்அவர்களின் நடவடிக்கைகள பலமுறைகளிலும் அதிர்வேட்டுகள்போல் எவரையுமே திகைக்கச்செய்யும்பெற்றிவாய்ந்தன. ஓர் சிவிலுத்தியோகஸ்தராய், சர்வகலாசாலைக் கணிதசாஸ்திர பேராசிரியராய் விளங்கிய—தற்போது ஓர் நியாயவாதியாய் விளங்குகிற இவர் தமிழரசுக் கட்சியைப்பற்றி யாது கூறுகின்றார்? "என்னைப் பீடித்திருக்கின்ற பிணியும், தமிரசுக் கட்சியைப் பீடித்திருக்கின்ற பிணியும் ஒன்றேயாகும். ஆனால், அதைக்குணமாக்க அக்கட்சியினர் தேடிக்கண்டடைந்திருக்கும் மருந்து எனக்குச்சம்மதமானதல்ல. இந்தப்பிணியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள அவாகள் நஞ்சை உண்டு உயிர்மாளவிரும்புகிறார்கள்" எனக்கூறுகின்றார்.

நிற்க, அன்றுநிகழ்ந்த ஓர் கூட்டத்திலே நியாயதுரந்தரர் வி. எஸ். கார்த்திகேசு, ஜே.பி., யு. எம். அவர்கள்பேசியபோது: "திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களகோரும் தமிழரசைத் தமிழ்மக்கள்ஆதரிப்பது நஞ்சைஎடுத்துத் தங்கள் கையினாலே உண்பதற்குச் சமானமாகும். விழ்யிருந்தும் குழியில்விழுவது மனிதனுக்கு ஏற்றதல்ல" என்று அழுத்தமாகக் கூறியிருக்கின்றார். இப்பெரியார்கள் இருவரும் தமிழரசுக்கட்சியையும், தமிழரசையும்பற்றிக் கூறியிருப்பவைகளை ஒவ்வோர்தமிழ்மகனும் ஊன்றி ஆலோசிக்கவேண்டும. தற்போதைய பாராளுமன்றத்திலே தமிழரசுக் கட்சியினராக இருந்துவருகின்ற அங்கத்தவர்கள் இருவரும் எதிர்க்கட்சிகளுடன் அதாவதுகம்யூனிஸ்த-லங்காசமசமாஜ—நவலங்கா சமசமாஜ முதலாம் கட்சிகளுடன் தோழமைபூண்டவர்கள். இலங்கையிலே தமிழரசுவிஷயமாய் இக்கட்சிகளில் எதுவேனும் இவர்களுக்குஆதரவளிக்கவும், அரசியல் விஷயமாய் நாட்டைப்பஙகுபோட்டுப் பிரிக்கவும் உடன்பட்டுவருமா? சம்மதியளிக்குமா? இந்தவினைக்களைத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் தமக்குள்கேட்டுச் சிந்தித்துப்பார்த்து, தங்களைப் பொதுத்தேர்தலுக்கு ஆயத்தப்படுத்துவார்களாக!

## பிரித்தானியும் ஸ்பெயினும்

I

ஸ்பானியஅரசாங்கத்தின் தலைவராய் இன்று விளங்குகிறவர் ஜெனறல் பிராங்கோ அவர்கள். அங்குகம்யூனிஸ்தவேதாளங்கள் நடாத்திய உள்நாட்டுக் கலகத்தின்போது அவர்களிடமிருந்து அந்நாட்டைக் காத்துவைத்த முதற்பெருமை அவருக்கே உரியதெனலாம். ஐரோப்பாவிலே சமீபகாலத்தில் ரூஷியாபடையெடுத்தே தீருமென்று அவர் நம்புவோராயில்லை. அல்லவென்று அதுபடையெடுக்குமானால் பிரித்தானியும். ஸ்பெயினுமே அத்திலாந்திக் சேமப்படைகள், பாதுகாப்புகள், போக்குவரத்துப் பாதைகளின் முக்கியதளங்களாகக் கொள்ளப்பட்டு, உடனே தாக்கப்படுமென அவர் கருதுகின்றார். அம்மட்டா! இவ்விருநாடுகளும் மிகக்கடுமையாகக் குண்டுமாரிபொழியப்பட்டுப் பெரிதும்சேதமடைவதுடன், ஆகாயத்திலிருந்து ஏககாலத்திலே அவைகள்மீது படையெடுக்கப்படுமென்பதும் அவருடையகருத்தாகும். யுத்தம் ஒன்று மூண்டுகொள்ளுமிடத்துப் பிரித்தானியிலும், ஸ்பெயினிலும் ஏககாலத்திலே ஆகாயமார்க்கமாக இறக்குவதற்கென்று பத்துலட்சம் ரூஷியபோர்வீரர்கள் பயிற்றப்பட்டு வருகிறார்களென்பதுஜெனறல்பிராங்கோ அவர்களுக்குக் கிடைத்துள்ள தகவலாகும. போர்ஆகாயவிமானங்கள்மட்டிலே ரூஷியா தற்போது அமெரிக்காவிலும் மிகமேம்பட்டுள்ளதென்றும், அதனால் காலம்வரும்போது போர்வீரர்களை ஏற்றியிறக்கப் போதிய ஆகாயவிமானங்களை அது கொண்டிருக்குமென்றும் அவர் நம்புகின்றார். ஸ்பெயின் தற்போது எந்தவேளையிலும் தயாராக நான்குலட்சம் போர்வீரர்களை வைத்திருக்கின்றது. அவசரகாலம் ஏற்படுமிடத்து இவர்களின் தொகையைப்பத்துலட்சம் பேராகப் பெருக்கிவிடலாம். இவர்களுக்கெல்லாம் பிரமாண்டமான ஆகாயப்படையெடுப்பைச் சமாளிக்கக்கூடிய வகையிலே பயிற்சியளிக்கப்படுகின்றது. ஆனால், அமெரிக்க யுத்தோபகரணஉதவிகள் பதமையாகவந்துகொண்டிருப்பதே இவர்களுக்குள்ள பெருங்குறையாகும். அதனால்பிரித்தானியும், ஸ்பெயினும் ஒன்றுசேர்ந்து ஒருமனப்பட்டுப் பொதுவானசத்துராதியை எதிர்க்குமுறையிலே திட்டங்களை வகுக்கவேண்டுமெனப் பிராங்கோ ஆலோசனை கூறுகின்றார். பிரித்தானியும் ஸ்பெயினும் தங்களிடையே இருந்துவருகின்ற பழையசந்தேகங்கள், நம்பிக்கையின்மைகளை அறவேவைகைவிட்டு ஜிப்ரோல்றார் தொடுவாய்சம்பந்தமான பிணக்குகளையும், ஆட்சேபனைகளையும் ஓர்புறத்தே ஒதுக்கிவிட்டு, நேர்முகமான ஓர்நட்புஉடன்படிக்கையைச் செய்துகொள்ள வேண்டுமென்று அவர் கோருகின்றார்.

தபசுகாலத்தின்

## 4-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 6 : 1—15)

அக்காலத்தில் யேசுநாதர் திபேரியாநகரத்துக் கடலாகிய கலிலேயாநாட்டுக்கடலைக் கடந்துபோனார். திரளான சனக்கும்பல், அவர் வியாதிக்காரருக்குச் செய்துவரும் அற்புதங்களைக் கண்டிருந்தமையால், அவரைப்பின்சென்றது. ஆகையால், யேசுநாதர் ஓர் மலைமீது ஏறி அங்கே தம்முடையசீஷர்களோடு உட்கார்ந்திருந்தார். அப்படியிருக்க யூதர்களுடையதிருநாளாகிய பாஸ்காப்பண்டிகை சமீபித்திருந்தது. அப்போது யேசுநாதர் தம்முடைய கண்களை ஏறெடுத்து, மிகுதியான சனக்கும்பல்தம்மிடத்தில்வந்திருக்கிறதைக்கண்டு, பிலிப்பென்பவரை நோக்கி: இவர்கள் உண்ணும்படி எங்கேயிருந்து அப்பங்களைச்சம்பாதிப்போம்? என்றார். ஆனால், அவரைச்சோதிக்க இப்படிச்சொன்னார். ஏனெனில், தாம்செய்ய இருப்பதைத் தாமே அறிந்திருந்தார். பிலிப்பு அவருக்கு மறுமொழியாக: இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சமாவது சாப்பிடுவதற்கு இருநூறுதெனியர்பெறும் அப்பங்கள் இவர்களுக்குப் போதாதே என்றார். அப்பொழுது அவருடையசீஷர்களில் ஒருவரும், சீமோனென்னும் இராயப்பருடைய சகோதரருமாகிய பெலவேந்திரர் அவரைநோக்கி: வாற்கோதுமைஅப்பங்கள் ஐந்தும், மீன்கள்இரண்டும் வைத்திருக்கிற ஓர்பையன் இங்கே இருக்கிறான். ஆனால், இத்தனை பேர்களுக்கு அவைகள்எம்மாத்திரம்? என்றார். யேசுநாதர்: மனிதரைப் பந்தியமரச்செய்யுங்கள்என்றார். அவ்விடத்தில்அதிகம்புல்லிருந்தது. அங்ஙனம், ஏறக்குறைய ஐயாயிரம்புருஷர்கள் பந்திஅமர்ந்தார்சள். அப்பொழுது, யேசுநாதர் அப்பங்களைஎடுத்து, நன்றியறிந்த தோத்திரஞ்செலுத்தினபின்பு, பந்தியில் அமர்ந்தவர்களுக்கு அவைகளைப் பரிமாறினார். அப்படியே மீன்களிலும் தங்களுக்கு இஷ்டமானமட்டும் அவர்களுக்குப் பரிமாறினார். அவர்கள் திருப்தியடைந்தபின், அவர்தம்முடைய சீஷர்களைநோக்கி: மீதியானதுண்டுகள் சேதமாகாதபடிக்கு அவைகளைச்சேர்த்து வையுங்கள்என்றார். ஆதலால், வாற்கோதுமைஅப்பங்கள்ஐந்தில்புசித்து மீதியான துண்டுகளைச்சேகரித்துப் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள். யேசுநாதர்செய்தருளின அற்புதத்தை அம்மனிதர் கண்டபோது: மெய்யாகவே உலகத்தில் வரவிருக்கிற தீர்க்கதரிசி இவர்தான்என்றார்கள். ஆகையால், அவர்கள் தம்மைஇராசாவாக்கும்படி பலவந்தமாய்ப் பிடிக்கவரப்போகிறார்களென்று யேசுநாதர்அறிந்து, மறுபடியும் தனியேமலையின்மேல்ஏறி விலகிப்போனார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய நற்கருணையின்பேரில்

## (திரிகோணமலை மேற்றிராணியாரின் தபசுகால நிருபம்)

(முன் தொடர்ச்சி)

நாம் தேவநற்கருணை பெறும்பொழுது ஆசாரத்தோடும், அவதானத்தோடும் பெறுவோமாக. இந்தநேரம் அங்குமிங்கும் பார்ப்பதற்கும், மற்றவர்களைநோக்கிச் சிரிப்பதற்கும், கதைப்பதற்கும் ஏற்றநேரமல்ல. இவ்விதஞ் செய்துகொண்டு தேவநற்கருணை பெறப்போகும் ஒருவர் தன் ஆத்துமத்தில் நடக்கவிருக்கும் சம்பவத்தின் பரிசுத்ததனத்தைத் தெளிவாக உணரவில்லை.

பத்திக்குரியநேரம்வருகின்றது. குருவானவர் பரிசுத்தநற்கருணையை உன் நாவில் வைக்கின்றனர். ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் பரமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய வார்த்தையானவர் தாய்மாரில் அதிபரிசுத்தவதியின் கன்னிஉதரத்தில் பிரவேசித்து அங்குமனிதனுய் அவதரித்தனர். கர்த்தர்பிறந்த திருநாளுக்கு முந்தியநாள் இரவில் இவ்வுலகத்தினுள் பிரவேசித்து நமது இரட்சணிய அலுவலைத் தொடங்கினர். இப்போது இந்த மாம்சமாகிய வார்த்தை ஆனவரான உனது இரட்சகர் உனக்குள்ளே வசிக்கும்படி வருகின்றனர். இன்னும் மேலாக உனதுசதையின் சதையாகவும், இரத்தத்தின் இரத்தமாகவும் வந்து அவரின் புண்ணியமும், பெலனும், வரப்பிரசாதமும் உன்னுடையவைகள் ஆகும்படியும் உன்னிடம் வருகின்றனர். என்னமகத்துவமானநேரம்! உனதுபத்தி எவ்விதமாய் இருக்கவேண்டும்! என்ன தாழ்ச்சியோடும், அன்போடும் திரும்பி உன்னிடத்துக்குப் போய் முழந்தாளில்இருந்து அவருக்கு உருக்கமான நன்றிசெலுத்துதலில் உன்உள்ளத்தைச் சொரியமாட்டாய்? உன்னுடைய சந்தோஷங்களையும், துயரங்களையும், தேவைகளையும்பற்றி அவரிடம்பேசும் நேரம்இதுவே. பரலோகத்துக்கும், பூலோகத்துக்கும் கர்த்தராகியவர் உன்னிடம் வந்திருக்கின்றனர். அவருக்கு ஏற்றவரவேற்பைக் கொடுப்பாயாக.

### தேவநற்கருணையில் யேசுநாதர் கல்வாரிமலைப் பலியைப் புதுப்பிக்கின்றனர்

நமது ஆண்டவரின் மனிதாவதாரமும் பிறப்பும்பெரிய பரமஇரகசியங்களாய் இருந்தாலும், இவைகள் பிரதானசம்பவமாகிய நமது இரட்சணியத்தின் ஆயத்தங்களாய்இருந்தன. இவைகள் நம்மைக் கல்வாரிமலைக்கு நடத்தும் படிகள். கல்வாரிமலையில் இருந்தே நமக்கு இரட்சணியம் வருகின்றது. அங்குதான் யேசுக்கிறீஸ்துநாதர் பிரதான ஆசாரியராகவும திவ்விய பலிப்பொருளாகவும் நமது இரட்சணியப் பலியைப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்தனர். அந்தப்பலியால் மெய்யானமனிதனுகிய யேசுநாதர் எங்கள் சகோதரராகவும் எங்கள் போராலும் எங்கள் பாவங்களின் மன்னிப்புக்காகத் தமது உயிரை ஒப்புக்கொடுத்தனர். அவர் மெய்யான மனிதனுமானபடியால் அந்தப்பலியானது பரமபிதாவுக்கு ஏற்றதாகவும் இருந்தது. அந்தநேரத்தில்தானே சருவேசுரனுக்கும் மனிதனுக்கும் இடையில் பாவம்உண்டாக்கிய பாதாளமானது அழிந்தது. கிறீஸ்துநாதரின் பலியின்வழியாய்ப் பிதாவாகிய சருவேசுரனிடம் திரும்பப்போகக் கூடியதாயிற்று. திவ்வியபலிப்பொருளாகிய கிறீஸ்துநாதரின்வழியாய்ப் பிதாவானவர் நம்மிடம் வரக்கூடியதாயிற்று. இனிமேல் இரட்சணியத்தை அடையவும் கூடியதாயிற்று.

இனிமேல் இரட்சணியம் நிச்சயமானதாய்அல்ல, அடையக்கூடியதாய் இருந்தது என்றோம். ஏனெனில கிறீஸ்துநாதர் கல்வாரிமலையில் இரட்சணிய அலுவலில் தமக்குரியபகுதியைச் செய்துமுடித்தனர். இதுதான் இரட்சணியத்தை அடையக்கூடியதாக்கிய செயல். இனிஇரட்சணிய அலுவலில் நமக்குரியபகுதியை நாமும்செய்ய வேண்டும். நமதுபேரால் இரட்சணியத்தின்பலியை அவர் ஒப்புக்கொடுத்தனர். இனி நம்மில் ஒவ்வொருவரும் தானுக இப்பலியைத் தனக்காகவும் ஏற்று உறுதிப்படுத்தவும் வேண்டும். இனி ஒவ்வொருவரும் கிறீஸ்துநாதரின் பலியில் தன்னையும்சேர்த்து அதைத் தன்னுடையதாக்கவும் வேண்டுமே. இவ்விதமே ஒருவர் கிறீஸ்துநாதரின் பலியோடு தன்பலியையும்சேர்த்து ஒன்றாக்கினுல், அது பரமண்டலங்களில் இருக்கும் பிதாவானவரைச்சேரும். அதன்பின் பிதாவானவர் கிறீஸ்துநாதரின்வழியாய்ப் பலிசெலுத்தியவரோடுஒன்றாகுவார்.

பூசைப்பலியானது கல்வாரிமலைப்பலியின் புதுப்பித்தலாகும். ஒரே பிரதான குருவாகிய யேசுக்கிறீஸ்துநாதரே அதை ஒப்புக்கொடுப்பவர். முன்னொருமுறை இரத்தஞ்சிந்தியவிதமாய் சிலுவையாகியபீடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரே திவ்வியபலிப்பொருள் இன்றைக்கு இரத்தஞ்சிந்தாதவிதமாய் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. பூசைப்பலியால் கல்வாரிமலைப்பலி உலகமெங்கும் பரந்து, இரத்தஞ்சிந்தாத பலியின்வழியாய் இரத்தஞ்சிந்திய பலிப்பொருளின் பலன்கள் நமக்கு எப்பொழுதும், எவ்விடத்திலும், பெருகிக்கொண்டிருக்கும்படி நூற்றுண்டுகள்தோறும் உலகபரியந்தம் நிலைத்திருக்கும். கிறீஸ்துநாதர் தேவநற்கருணையில் நம்மோடு இருக்கத்தீர்மானித்ததற்குப் பிரதான காரணம் இதுவே.

இவ்விதமாகக் கிறீஸ்துநாதரின் அளவில்லா ஞானமும் நன்மைத்தனமும், சிலுவைஅடியில் பெரியவெள்ளிக்கிழமை நின்றவர்களைப்போல், நம்மையும அவரின்பலியில் ஒரு முறையல்லப் பலமுறையும் பங்குபற்றச் செய்திருக்கின்றது. நாமும் உற்சாகமுள்ள விசுவாசத்தோடும் நமது பாவங்களின் மட்டிலுள்ள மனத்துக்கத்தோடும் அதிபரிசுத்த பலிப்பொருளை ஒப்புக்கொடுத்தால் வரப்பிரசாதக் கொடையையும், மனஸ்தாபக் கொடையையும்பெறலாம். நாம் நம்மைப்பலியாக ஒப்புக்கொடுத்தல் பரமபிதாவானவருக்குப் பிரியமாய் இருக்கும்படி திவ்வியபலிப்பொருளோடு நம்மைச்சேர்த்துக் கொள்ளலாம். தேவநற்கருணைபெறும்நேரத்தில் சருவேசுரனும் நம்மிடம்வருகின்றனர். அதாவது, பூசையின்நிமித்தம் கிறீஸ்துநாதரின் பலியை நமது பலியாக்கி இரட்சணியத்தின் பலன்களை நாம் அடைந்து கொள்ளலாம்.

திவ்வியபூசையானது எங்கள்சமயத்தின் பிரதானசெயல் என்றதை மேலே கூறப்பட்டவைகளில்இருந்து உணர்ந்து கொள்ளுதல் இலேசாயிருக்கும். மறு உலகசீவியத்தில் சருவேசுரனேடு ஒன்றித்துவாழும்படி, இவ்வுலகசீவியத்தில் தானே நம்மை அவரோடு ஒன்றித்திருக்கச் செய்தலே கிறீஸ்துசமயத்தின் பிரதானநோக்கமாகும்.

(தொடரும்)

---

—ஸ்பெயினிலுள்ள இராணுவதளங்களைப் பாவிப்பதற்காக ஸ்பானியஅரசாங்கத்துடன் அமெரிக்கஅரசாங்கம் நடத்தவிருக்கும் முறைபான பொருத்தனைப்பேச்சுகள் விரைவிலே ஆரம்பமாகுமென்று அமெரிக்கஇராச்சியமந்திரியாரான திரு. டீன் அச்சிஸன் அவர்கள் சென்றவியாழக்கிழமை அறிவித்திருக்கின்றனர்.

---

### தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரின் தபசுகால நிருபம்

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

போது அரசர் கண்ணயர்ந்து நித்திரைசெய்கிறது போல் இருந்தார். ஆனல், உயிர்இல்லை. அவர் எந்தநேரத்தில் உயிர்விட்டாரென்று ஒருவருக்கும் தெரியாது. முந்தின இரவு ஏறக்குறைய நற்சுகத்துடன் இருந்த மன்னர் மறைந்தாரென்ற செய்திபரவியது. மின்னுமல் கோடையிடி விழுந்தாற்போல அகிலஉலகமும் திடுக்கிட்டுப் போயிற்று. பட்டமகிஷி எலிசபேத்இராசகுமாரி அவ்வமயம் ஆபிரிக்காவிலுள்ள கெனியாவில் திக்விஜயம்செய்து பின்னர் கொழும்புக்குவரத் தயாராய்இருந்தார். வெண்ணெய் திரண்டுவரும்போது தாழி உடைந்ததுபோல இலங்கை ஆஸ்திரேலியாப் பிரயாணம் எல்லாம் நிறுத்தப்பட்டது. எலிசபேத்இராணி அழுதகண்ணும் சிந்தியமூக்குமாய், ஆகாயமார்க்கமாய் லண்டனுக்குப் பறந்துசென்று உயிரற்றுக் கிடந்த தமது நேசதந்தையைக் கண்ணுற்ருர். மன்னருக்கு வயது 56. இராசா ஆறும ஜோர்ஜ் மரித்தார். இராணி இரண்டாம் எலிசபேத் பல்லாண்டு வாழ்க. இதுதான் உலகத்தின் அநித்தியவாழ்வு.

அன்பார்ந்த பிள்ளைகளே! நம் எல்லோருக்கும் வேண்டியது ஒரே ஒருகாரியம் தான், நல்லமரணம், நித்தியமோக்ஷம். இதற்குநாம் செய்யவேண்டியதென்ன? ஒவ்வொரு இரவும், நாம்நித்திரைக்குப் போகிறதற்குமுன் நம்மைத்தானே கேட்கவேண்டியது: இன்றிரவு செத்தால் நான் எங்கேவிழிப்பேன். சாவானபாவத்தோடு செத்தால் நித்திய நரகநெருப்பில விழிப்பேன். இதை விசுவசிக்கிருயா? சாவானபாவத்தோடிருந்தால் உத்தம மனஸ்தாபப்படு. கூடியசீக்கிரம் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வேனென்று பிரதிக்கினைசெய். இப்படி உத்தம மனஸ்தாபப்பட்டு மரித்தால் நீ நரகத்துக்குப் போகமாட்டாய்.

எவன் என்னுடைய மாம்சத்தைப் புசிப்பானே, எவன் என் இரத்தத்தைப் பானம்பண்ணுவானே அவனுக்கு நித்தியசீவியம் உண்டு. மாதத்தில் வரும் முதல்வெள்ளிக்கிழமை விடாமல் ஒன்பதுவெள்ளிக்கிழமை பக்தியுடன் நன்மைவாங்குவாயாகில் நல்லமரணம் கிடைக்குமென்று யேசுவின் திருஇருதயம வாக்களித்திருக்கிறது. மரியாயின் பிள்ளை அவலமாய்ச் சாகமாட்டாதென்பது உண்மை. கூடுமானல் நாள்தோறும் செபமாலை சொல்லிவா. தேவதாய் உன்னைஒருபோதும் கைவிடமாட்டாள்.

யேசுவின் திருக்கரத்திலும், தேவதாயின் திருக்கரத்திலும் பாக்கியமாய்மரித்த அர்ச்.சூசையப்பரிடம் போ. அவர்தான் நல்லமரணத்துக்குப் பாதுகாவல். அவரை நம்பினவர்கள் ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள். இறுதியாய், யேசு மரி சூசை என் இருதயத்தையும் என் ஆத்துமத்தையும் உங்களுக்குக் கையளிக்கிறேன். யேசு மரி சூசை என்னுடைய கடைசி அவஸ்தையில் எனக்கு உதவி செய்தருளுங்கள். யேசு மரி சூசை உங்களுடைய அர்ச்சியசிஷ்டகூட்டத்தில் சமாதானமாய்மரிக்க உதவிசெய்தருளுங்கள் என்றுசொல்லி உயிர்விடுவோமாக.

---

### கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த மகா ஞானவொடுக்கம்

வழமைப்பிரகாரம் இம்முறையும் கத்தோலிக்க ஆசிரியைகளின் மகா ஞானவொடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடத் தாபனத்தில் வரும் சித்திரைமாதம் 16-ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகி 20-4-52 காலை திவ்வியபூசையோடு முடிவாகும்.

விடுதியில் சகலவசதிகளும் அளிக்கப்படும். வரவிரும்புபவர்கள் நேரகாலத்துடன் சங். தாயாரவர்கட்கு அறிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர். ஆசிரியைகள் அல்லாத பெண்களும் பங்குபற்றுவதற்கு உத்தரவுண்டு. எனவே, தங்கள் ஆன்மலாபத்தை விரும்பும் எவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படியாக மிக்க விநயத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

Rev. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai.

---

### தலைவர் சுபதினம்

எமதுமுகக்கண்முன்பாகமறைந்தும், மனக்கண்முன்பாக ஒருபோதுமே மறையாத வண. E. குருசோவிறதர் அவர்களால் அடியிடப்பெற்ற எங்கள் கூட்டத்தின் பாதுகாவலராம் அர்ச். சூசையப்பர் திருநாள் நேற்றைத்தினமாகும். அம்மட்டா! அது எங்கள் கூட்டத் தலைவர் வண. N. யோசெவ் சுவாமியவர்களின் பெயர்கொண்ட சுத்தவாளரின் சுபதினமுமாகும். தந்தைசுபதினம் மைந்தர் மகிழ்தினம். எனவே, கூட்டஅங்கத்தினர் எல்லோருக்கும் அது ஓர்கொண்டாட்டதினமாக இருந்தது. காலை 6-15மணிக்குக் கூட்டக்கோவிலிலே வண. சுவாமியவர்களால் திவ்வியபூசைப்பலி நிறைவேறியது. அங்கத்தினர் திரளாகச் சமுகமளித்திருந்தனர். திருவிருந் தருந்தினர். பிற்பகல் 4.30 மணிக்கு விளையாட்டுப்போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றன. அதன் முடிவிலே அனைவரும் அவரைவரவேற்று ஓர்உபசாரவிழா நடத்தினர். திரு. A. P. முத்தையா அவர்கள் ஓர்உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். அதனைத்தொடர்ந்து, விளையாட்டுகளிலே வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பெற்றன. ஆசிரியர் S. மரியாம்பிள்ளை, திரு. G. பேர்க்மன்ஸ் அவர்களும், வேறுசிலரும்சொற்பொழிவாற்றினர். பின்னர் தேநீர்உபசாரணை சிறப்பாகநடந்து, ஈற்றில் தலைவர்அவர்களின் நன்மதியுடனும், நன்றியுரையுடனும் விழா இனிதே நிறைவாயது.

—ஓர் அங்கத்தவர்.

---

— கோறியாவிலே கம்யூனிஸ்த படைகள் ஐக்கியநாடுகளை எதிர்த்து நடத்தும்யுத்தத்திலே உபயோகிக்கும் ஆயுதங்களில் பெரும்பகுதி ருஷியாவிலேசெய்து, ருஷியாவாலே உதவப்பட்டுள்ளதெனக் கண்டறியப்பட்டிருக்கிறது. தற்போது கம்யூனிஸ்தபடைகள் கோறியாவிலே 9லட்சம்போர் வீரர்களையும், 500 தாங்கிகளையும் கொண்டிருக்கின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்ந்த மலர்கள்

—:—

பண்டைக்காலத்தில்ஆண்ட இந்திய அரசன்ஒருவன் புத்தகப்பிரியன். பல அரியநூல்களைச் சேகரித்து வைத்தான். — ஒட்டகச்சுமைக்கணக்கில் கூறுவதானால், அவற்றை ஆயிரம்ஒட்டகச்சுமை என்றுகூறவேண்டும். இவை யாவற்றையும் வாசித்தறிவது முடியாத காரியம் என்றுஉணர்ந்தஅரசன் புத்தகங்களிலிருந்து முக்கிய பகுதிகளைப் பொறுக்கி எடுத்துக் கோர்வைகளாக ஆக்கக்கற்பித்தான். அறிஞர்கள் இருபதுவருஷம் உழைத்துப் பொறுக்கிய மணிக்கோர்வைகள் முப்பதுஒட்டகச்சுமை. இவற்றையுமே வாசித்து முடிப்பது கஷ்டமென்றுணர்ந்த அரசன் கோர்வைகளை இன்னுமேசுருக்கி வெளியிடும்படி கேட்டுக்கொண்டான். —படிப்படியாகச் சுருக்கிக்கொண்டே போய், கடைசியாக அந்நூல்களிலிருந்த அரியவிஷயங்களில் அதிமுக்கியமானவற்றை வெளியிட்டார்கள். அப் புத்தகங்களையும்கூடத் தான் வாசித்துமுடிக்க முடியாதென அங்கலாய்த்தான்அரசன். — அதைக் கண்ணுற்றமந்திரி ''அரசே! இந்நூல்களிலுள்ள சகலஞானத்தையும் நான் வெகுசுருக்கமாக எழுதி வைத்திருக்கிறேன், இதோ இந்தஓலையில்.''

நன்மையானதைத்தவிர வேறு யாதொன்றையும் விரும்பாதே; உண்மையைத்தவிர யாதொன்றையும் நினையாதே.

உன்னையே அடக்கிஆள்; அப்படிச் செய்தால் உலகத்தை அடக்கிஆள்வது சுலபம்.

புண்ணியமின்றி இன்பமில்லை; கடவுளின்றிப் புண்ணியமில்லை.

லௌகிகசாஸ்திரங்களைப் பற்றிப் பேசும்போது திட்டவட்டமாக முடிவு சொல்லாமல் வருங்கால ஆராய்ச்சியினால் ஏற்படக்கூடிய அபிப்பிராயமாற்றங்களை உத்தேசித்து ''அநேகமாக'' என்று சந்தேகமுறையில்பேசு.

* * *

அயர்லாந்திலே புரொட்டஸ்தாந்த வேதகலாபனை நடந்தேறியகாலத்திலே ஓர்நாள் யாசகர்ஒருவர் மிக்கேல் மைக்டவுட் என்பவரின் வெள்ளைச்சுவர்க் குடிசைமுன்பாகத் தரித்துநின்று தருமங்கேட்டார். அப்போது மிக்கேல் மைக்டவுட்என்பவரின் பன்னிரு வயசுடைய புதல்வியான காதி எனும் பெண்பிள்ளை கதவண்டைவந்து சோடாப்பாணிலே அரைப்பாண் ஒன்றை அந்தயாசகரிடம் கொடுத்து, ''ஐயா! நாங்கள் வைத்திருப்பதில் முதற்தரமானது இதுதான்'' என்று சொல்லித் தனது கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தாள்.

அதைக்கண்ணுற்றயாசகர் ''பிள்ளை! நீஏன் அழுகிறாய்''என்று உருக்கமாகக் கேட்டார். அதற்கு மறுமொழியாக ''ஐயா! எனதுதகப்பனார் மரணப் படுக்கையில் இருக்கின்றார். உதவிக்கு ஒருவருமில்லை'' என்று அப்பெண்பிள்ளை கூறினாள்.

''சரி, அப்படியானால் நான்வந்து ஏதும் உதவிசெய்யலாமா? உள்ளே வரட்டுமா?'' என்றார் யாசகர்.

அப்போதுஅங்கே ஒரு சிறு கட்டிலில்கிடந்த மிக்கேல் மைக்டவுட்என்பவர் ''ஆம், உம்மால் உதவிசெய்யமுடியும்; உள்ளேவாரும்''என்று சைக்கினை காட்டி அழைத்தார். உடனே யாசகரும் உட்பிரவேசித்து, அவரண்டை சென்று ஆறுதல்சொல்லிச் சீவியத்தையும், மரணத்தையும், மறுஉலகத்தையும்பற்றி அவருக்கு நெடுநேரமாக உணர்ச்சிததும்ப எடுத்துக் கூறினார். அதனால் அந்தயாசகர் ஓர்கத்தோலிக்கர்என்பது தெளிவாகிவிட்டது.

கடைசியாகச் சாகக்கிடந்தவர் அந்த யாசகரைநோக்கி: ''ஆனால், ஐயா!

## பொது வர்த்தமானம்

—※—

### ஸ்பெயின் முடியரசாகுமா?

மீளவும் ஸ்பெயின் ஓர்முடியரசாக வேண்டுமென்று ஸ்பானிய பாராளுமன்றம் சம்மதவாக்கு அளித்திருக்கிறது. அதனால் அரசர்ஒருவர் அங்கு சிம்மாசனமேற வழி திறக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் சிம்மாசனமேறுமுன் அதிகமானஸ்பானியர்கள் முன்னதாகவே அவரது தகைமைகளையும், குணலட்சணங்களையும் நன்கு அறியவேண்டும். புதிதாகஅமைக்கப்படும் முடியரசு திடமெனநின்றுவிடக்கூடிய நிலைமைகள் ஏற்படாவண்ணம் உள்நாட்டிலும், பிறநாடுகளிலும் அரசியல் நிலைமைகள் சீர்ப்படுகிறவரையில் காத்திருக்கவேண்டும். அன்றேல் அவர் பலவிதமான கஷ்டங்கள், முடிவடையாத பிரச்சினைகள்மத்தியில் விடப்படுகிறவராவர். ஸ்பானியசிம்மாசனத்துக்கு உரிமைக்காரரான தொன் ஜுவான் இளவரசர் தற்போது போர்த்துக்காலிலே லிஸ்பன்நகருக்குச்சமீபமாகச் சஞ்சரித்துவருகின்றார். அதிகமான ஸ்பானியர்கள்சென்று அவரைத் தரிசித்துவருகின்றனர். தாம்அதிகம் விருத்தாப்பியராகுமுன்னரே ஸ்பெயினில் முடியரசை ஸ்தாபிக்கவேண்டுமென்று ஜெனறல் பிறுங்கோ ஆசிக்கிறாரென நம்பப்படுகிறது.

### அமெரிகக குடியரசுக்கட்சி

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலிலே குடியரசுக்கட்சியின் அபேட்சகராக வந்து, தற்போது முதன்மைவகித்து வருகிறவர், செனற்றர் ராவ்ற் என்பவரே. இவர்தான் புதியஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படத் தகுதியானவரென அவர்கட்சியினர் சாற்றுகின்றனர். இவர் பழையஓர்ஜனாதிபதியின் புதல்வர். அரசியலிலேபிறந்து, அரசியலிலேவளர்ந்தவர். ஒகியோநாட்டைச்சேர்ந்த ஓர்செனற்றரான இவர் தேர்தல்விஷயமாய் இதுவரை 35,000 மைல்தூரம் சுற்றுப்பிரயாணஞ்செய்திருக்கிறார். இன்னும் 20,000 மைல் பிரயாணஞ்செய்ய விருக்கின்றார். ஆனால், குடியரசுக்கட்சியினரின் கண்முழுவதும திரு. ட்றூமன் அவர்களில்தான். ஏனெனில், அவர் திரும்பவும் தேர்தலுக்கு அபேட்சகராகநிற்பார் என்பதற்கானஅறிகுறிகள் காணப்படுகின்றன. அபேட்சகராக அவர்நிற்பாராயின் குடியரசுக்கட்சியினர் இம்முறையும் தோற்கடிக்கப்படுவார்களென அவர் திடநம்பிக்கையாய் இருக்கிறார்என்பதை அதிசுருதுவதாகும்.

---

நான் இப்போது சாகமாட்டேன்'' என்றார்.

''ஏன்சாகமாட்டீர்''என்றார் யாசகர்.

''ஏனெனில், இருபதுவருடங்களாக நான் அனுதினமும் செபமாலைசொல்லித் தேவதிரவிய அனுமானங்களைப் பெறாமலும், ஓர்குருவானவரின் உதவியில்லாமலும் என்னைச் சாகவிடாதிருக்கும்படி தேவதாயாரை இரந்துமன்றாடிவந்தேன். நீர் ஒருகத்தோலிக்கர். பரிசுத்தகன்னிமரியாய் எனதுமன்றாட்டைக் கேளாமல் என்னைக்கைவிடுவாரென்று நீர்சந்தேகிக்கின்றீரா? இல்லை, நான் அப்படி ஒருபோதும சாகமாட்டேன்''என்றார் படுக்கையில்கிடந்தவர்.

இந்தவார்த்தைகளைக் கேட்டதே அந்தயாசகரின் உள்ளம்கசிந்து அவர் விழிகள் கண்ணீராற்தேங்கின. உடனே அவர் தமதுஉட்சட்டையிலிருந்து ஓர் பாரமான தங்கக்குருசைப் பூச்சியமாக வெளியிலெடுத்து, ''என்மகனே! தேவதாயார் உனதுசெபத்தைக் கேட்டருளினார்என்பதற்கு அற்பமுமே சந்தேகமில்லை. இந்தவேளை உமக்கு உதவிசெய்ய அவர்என்னை அனுப்பியிருக்கின்றார். ஆர்மாநகரின் மேற்றிராணியார் நாமே'' என்றார்.

## பொழுது போக்கு

முதலியார் மிருந்தபட்சங் காட்டிச் செல்லமாய் வளர்ததநாய் ஓர்நாள் காணமற்போய்விட்டது. அதை எங்குமதேடியும் காணமையால் அங்குள்ள பத்திரிகைக் காரியாலயஞ் சென்று தமதுநாயைக் கண்டுபிடித்துக்கொடுப்பாருக்கு 50 ரூபா இனும்அளிப்பதாகப் பத்திரிகைக்கு ஓர்விளம்பரம் எழுதிக் கொடுத்துச் செலவுங்கட்டிப் போயினார். பத்துநிமிஷம்சென்றதும் தாம் அவசரப்பட்டுப் புத்தியீனமாக அந்த விளம்பரத்தைப் போடச்செய்துவிட்டதாக உணர்ந்தார். 50 ரூபாவுக்கே அதிகம்நல்ல நாய்ஒன்று வாங்கலாமே என்றுநினைந்தார். உடனே அவசரம் அவசரமாகத் திரும்பவும் பத்திரிகைக் காரியாலயஞ்சென்றார். வாயிலில்நின்ற காவற்காரப் பையனைநோக்கி:

முதலியார்— நான்சற்றுமுன் விளம்பரங்கொடுத்த கனவானை ஒருகால் காணமுடியுமா?

பையன்— அவர் இப்போதே வெளியிற்போயினார் சேர்.

முதலி.— நல்லது, அப்படியானால் அவருடைய துணைஆளைக்காணலாமா?

பையன்— அவரும் இங்குஇல்லை, வெளியில்தான்போயினார் சேர்.

முதலி.—சரி, அவர்களின்முதலாளியைக் காணலாமா?

பையன்— அவரும் வெளியில்தான் சேர்.

முதலி.—அப்போநல்லது, பத்திரிகை ஆசிரியரையாவது...

பையன்—அவரும் இப்போதுவெளியில்தான்.

முதலி.— (துள்ளிக்குதித்து) அப்படியானால், ஓஹோ! இவர்கள்எல்லாம் எனதுநாயைத்தேடித்தான் வெளியில் போயிருக்கிறார்களோ?

* * *

ஆசிரியர்— (மாணவர்களைநோக்கி) சீனாஎன்பது மிகப்பிரமாண்டமான ஓர் தேசம். மிகப்பெரும் சனத்தொகையை உடையது. நாம்விடுகின்ற ஒவ்வோர்மூச்சுக்கும் ஒவ்வொரு சீனன் வீதம் அங்குசாகிறான்என்றால் சீனாவின் சனத்தொகையை நீங்களே ரூபிகரித்துக்கொள்ளலாம்.

இருநிமிஷங்கள் சென்றபின் வகுப்பில்இருந்த வில்லி ஓடிக்களைத்த ஒருவன் மூச்சுவிடுவதைப்போல் மூசிமூசி மூச்சுவிடக்கண்ட

ஆசிரியர்— என்னவில்லி, மூசிமூசிக் கடுமையாக மூச்சுவிடுகிறாய்?

வில்லி— விடுகிற ஒவ்வொருமூச்சுக்கும ஒவ்வொருசீனன் சாகிறான்என்று சொன்னீங்க சார். அதனால் கனக்க மூச்சுவிட்டுச் சீனன்களையெல்லாம் கொல்லுகிறேன் சார்.

* * *

பிறஊரவர்— இந்தப்பட்டணத்திலே யாராவது பெரியமனுஷர்கள் பிறந்திருப்பார்களா பாட்டி?

பாட்டி—எனக்கும் 90வயசு ஆகிறது. நான்அறிய இந்தப் பட்டணத்தில் குழந்தைகள்தான் பிறந்திருக்கின்றன.

* * *

சிநேகிதர்—தங்கள் மனைவியாரின் காணமற்போன பூனையைக் கண்டுபிடித்துக் கொடுப்பாருக்கு 50ரூபா வெகுமதி கொடுப்பதாக விளம்பரஞ் செய்திருக்கிறீராமே. அது மெத்தக் கூடிப்போய்விட்டது.

வீட்டுஎசமான்— ஆம், அதுகூடிப் போய்விட்டதென்று எனக்கும்தெரியும். ஆனால், அடித்துக்கொன்று ஆற்றில் கொண்டுபோய் அமிழ்த்திவிட்ட பூனையை ஆர்கண்டுபிடித்துக் கொடுக்கப்போகிறார்?

* * *

நோயாளி — பாலோ, சாதமோ, வேறேதுமோஇல்லாது தனியப்பாலே குடிப்பதில் எனக்குநல்ல சுகமுண்டாகுமென நினைக்கிறேன்.

டக்றர்— தனியப்பால்மாத்திரம் பசிதீர்க்காதே. சீவிக்கப்போதாதே. முன்னர் நீ எப்போதாவது அப்படிக்குடித்திருக்கிறீரா?

## நானசங்கதிகள்

—※—

— யப்பானிலே தேயிலைஉற்பத்தி அதிகரித்துக்கொண்டு வந்தபோதிலும் யப்பானியர்கள் யுத்தத்துக்குமுன் பருகியதிலும் அதிகம்குறைவாகவே தேநீர்பருகிவருகின்றார்கள். சென்றவருடம்யப்பானிலே 100 கோடிறாத்தல் தேயிலைஉற்பத்திசெய்யப்படலாயிற்று. யப்பானியதேயிலையில் பெரும்பகுதி முன்னர் சீனத்தேயிலை ஏற்றுமதி முதன்மைபெற்றிருந்த ஆபிரிக்கநாடுகளுக்கே ஏற்றுமதியாகின்றது.

— மேற்கு ஐரோப்பியநாடுகளின் ஆயுதப்பெருக்க அபிவிருத்தியாலே உலகயுத்தஆபத்து நாளுக்குநாள் குறைந்துகொண்டு வருகின்றதென்றும், சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான அவற்றின் ஆயுதப்பெருக்கத்தாலே கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புஅச்சுறுத்துதலும் படிந்துகொண்டுவருகின்றதென்றும் யூகோசிலேவிய சர்வாதிகாரியான மாஷல்ரிற்றோ கூறுகின்றார்.

— மூன்றுமுதல் நான்குமைல் தூரத்தில் வந்துகொண்டிருக்கும சத்துருவிமானம்ஒன்றைக் கண்டறிந்து, அழித்துவிடக்கூடிய வழிநடத்தும் நவீன எறிஆயுதம்ஒன்றை அமெரிக்க கடற்படை கண்டுபிடித்திருக்கிறது. ''ஸ்பார்வோ'' எனஅறியப்படும் இந்த ஆயுதம் சமீபத்திலே ஓர்விமானத்திலிருந்துசெலுத்திப் பரிசோதனைசெய்யப்படலாயிற்று.

— இத்தாலியிலே வியாறெக்கியோ நகரைச்சேர்ந்த சேர்வித்தசபைச் சந்நியாசியாரான ஆசா. அன்ரோனியோ மரியாபுச்சிசுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுந்திகதியாக இப்போதைக்கு வருகிறஆனி 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பிட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

— தேவதாயார்போரால் கட்டப்பட்ட ஆலயங்களில் மிகப்புராதனமானது, எபேசஸ்நகரில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அர்ச். கன்னிமரியம்மாளின் திருச்சரீரம் அடக்கஞ்செய்யப்பட்ட ஸ்தலத்தின்மீது அதுகட்டப்பட்டதாக நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

— சத்துருவின் யுத்தகளங்களிலும், அணிவரிசையிலுள்ள படைகளிலும், மற்றும் போர்முனைக்குச்சமீபமான இலக்குகளிலும் சிறிய அளவான அணுக்குண்டுகளை வீசுவதற்கென்று அமெரிக்கஆகாயப்படை இருவிமானப்படைகளைப் பயிற்றிவருகின்றது. இதற்கென்று ஓர்இனஜெற்வெடிகுண்டுப போர்விமானங்களை அது உபயோகிக்கின்றது.

— இவ்வருடத்திலே பிரித்தானியிலிருந்து வாரந்தோறும் எழுபதுபிரித்தானியர்கள்வீதம் ஆகாயவிமானங்களில்சென்று கனடாவில்போய்க் குடியேறியவண்ணம் இருக்கிறார்கள். இன்னும் பிரித்தானியிலிருந்து அங்கு போய்க் குடியேறுகிறவர்களை ஏற்றிச் செல்வதற்கென்று 38 கப்பல்கள் விசேஷவிதமாக ஒழுங்குசெய்யப்படுகின்றன.

— பிரித்தானிய தொழில்ஸ்தாபனம்ஒன்று வைக்கோலிலிருந்து கட்டிடங்களுக்குப் பயன்படக்கூடிய நூதனபலகைகளைத் தயாரித்துவருகிறது. ''ஸ்டிறாமிற்'' என அழைக்கப்படும் இந்தப்பலகைகள் எந்தவிதமான சீதோஷ்ணநிலைமையைக் கொண்டநாட்டிலும் பயன்படக்கூடியது. நெடுநாளைக்கு நின்றுபிடிக்கக் கூடியது. அதிகப்படியான உஷ்ணத்தைத் தாங்கக்கூடியது. ஆணிவைத்து அறைந்தோ அல்லதுபொருத்தியோ இதனைப்பாவிக்கலாமாம்.

---

நோயாளி— நான்பிறந்தமுதலாவது வருடம் தனியப்பால்தான் குடித்து வளர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

செல்வச் சகோதரங்களே!

உங்கள் தகப்பனார் தினத்தை ஆடல் பாடல்களுடன் கொண்டாடினீர்களா? யேசுவினது கைத்தாதையின் தினத்தில் உங்கள் தகப்பன்மாரை நினைத்து மன்றாடுவதும், நன்றிகூறுவதும் உசிதமல்லவா?

"மறக்க முடியவில்லை" என்ற கதையைப் படியுங்கள். அது உறுதியான விசுவாசமும், ஞான அபிமானமும் உங்களுக்குத் தரும். இந்தக் கதையை எழுதி அனுப்பிய செல்வன், கரவெட்டி பி. திருச்செல்வத்துக்கு ஜே! உணர்ச்சி நிறைந்த கதைதான்.

தபசுகாலத்தின் அரைவாசி முடிந்து விட்டது. இன்னும் எஞ்சியிருக்கும் நாட்களை அதிக கவனத்துடன் அனுசரியுங்கள். சுபம்.

உங்களன்புள்ள
அண்ணா.

## அன்னை

1

அம்மா; அம்மா; வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே
அம்மா உன்னைக் கண்டாலே
ஆசை அழுகை தீர்ந்திடுமே.

2

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே
பத்தியங்கள் காத்தாயே
பாடு பட்டு வளர்த்தாயே.

3

அழகு மிக்க அம்புலியை
ஆகாயத்தில் காண்பித்தே
பழமும் பாலும் ஊட்டிடுவாய்
பாட்டும் கதையும் படித்திடுவாய்.

4

தமிழைக் கற்றுத் தந்திடுவாய்
'தத் பித்' தென்னப் பேசிடினும்
"அமுதம், அமுதம்" என்றிடுவாய்
அணைத்து முத்தம் தந்திடுவாய்.

5

எனக்குச் சிறுநோய் வந்தாலும்
ஏனோ மிக்க வருந்துகிறாய்?
உணவும் இன்றி உறங்காது
உயிர்போல் என்னில் உருகுகின்றாய்.

6

உன்னைப் போல வளர்த்திடுவோர்
உலகில் உண்டோ வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே
எனக்குத் தெய்வம் நீதானே.

M. C. யோசேவ் எஸ்பீரியர்
முதலியாகுளம்

## உபவாசம்

யேசுநாதர் சுங்க வீதிவழியாய்ச் சென்றுகொண்டிருந்தார். சுங்கவாடியில் மத்தேயு வரி அறவிட்டுக் கொண்டிருந்தார். அதைவிட்டுத் தம்மைப் பின்செல்லும்படி யேசுநாதர் அழைத்தார். உடனே மத்தேயு தமது உத்தியோகத்தை விட்டிட்டு யேசுவின் சீஷனானார்.

மத்தேயு தமது சந்தோஷத்தைக் காட்டும் கருத்துடன் யேசுநாதருக்கும், சீஷருக்கும் ஓர் விருந்து கொடுத்தார். உடன் ஆயக்காரரையும் அழைத்திருந்தார். அன்று பரிசேயரும், ஸ்நாபக அருளப்பருடைய சீஷரும் உபவாசம் அனுசரிக்கிற தினம். இரு பகுதியாரும் சேர்ந்து யேசுநாதரிடம் வந்து "அருளப்பர் தமது சீஷரைச் செபிக்கவும், உபவாசங் காக்கவும் ஏவியதுபோல நீர் ஏன் ஏவுகிறதில்லை? அல்லாமலும் சதா உண்பதும், குடிப்பதும், விருந்து கொண்டாடுவதும் உங்கள் தொழிலாய் இருக்கிறதே!" என்றார்கள். இவர்கள் தங்கள் குறுகிய மனப்பான்மையைக் காட்டினர். வெளி ஆசாரங்களைத்தான் இவர்கள் பெரிதாக மதித்து வந்தவர்கள். அதினால் வீண் பெருமை தேடினார்கள்.

செபமும் தபமும் ஞானச் சீவியத்தின் வழிகள் அல்லாமல் கதி அல்ல என்பதை அறியார்கள் இவர்கள். நாம் வழிவகைகளைக் காலத்துக்கும், மனிதனுடைய நிலைபரத்துக்கும் தக்கவாறாய் அமைத்துக்கொள்ள வேண்டும். "கலியாண மாப்பிள்ளை வீட்டிலிருக்கும் பொழுது, விருந்தினர் நோன்பு அனுசரிக்கிறது தகுமா" என்று கேட்டார் கிறீஸ்துநாதர். அதாவது நோன்பு என்ற போரவலே சிநேகிதனுடைய விருந்தை அசட்டைபண்ணுதல் ஆகாது என்று காண்பித்தார்.

அல்லாமலும் பரிசேயரும், அருளப்பருடைய சீஷரும் பழைய ஏற்பாட்டை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கிறீஸ்துநாதரும், அவரைப் பின்பற்றுகிறவர்களும் புதிய ஏற்பாட்டுக் குரியவர்கள்.

இன்னொருமுறை ஒருசபத் (ஓய்வு) நாளிலே கிறீஸ்துநாதர் சீஷருடன் வயல்களினூடாகச் சென்றார். காலை நேரம் வெய்யில் அதிகம். பசி வந்தது. வயலில் பழுத்திருந்த கோதுமைக் கதிர் ஒன்றுஇரண்டை உருவி, மணிகளைக் கசக்கி அரிசியை வாயிற் போட்டுச் சப்பினார்கள். எங்கே கிறீஸ்துநாதரில் குற்றம் பிடிப்போமென்று காத்திருந்த பரிசேயருக்கு இது வாய்ப்பான தருணமாயிற்று. "சபத்நாளில் செய்ய ஒண்ணாதவைகளைச் செய்து ஏன் தேவ கட்டளையை மீறுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். கிறீஸ்துநாதர் சீஷருக்கு ஏவங் கேட்டார். "மனுமகன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவனாயிருக்கிறார்." அவர்களே சங்கை செய்து வந்த தாவீது அரசரின் நடத்தையை எடுத்துக் காட்டினார். தமக்குப், தம்முடன் கூட இருந்தவர்களுக்கும் பசியாயிருந்த பொழுது, குருக்கள் மாத்திரமே உண்ண உத்தரவிருந்த கோயில் அப்பத்தைத் தாமும் உண்டு மற்றவர்களுக்கும் கொடுத்ததைக் கூறி, சீஷர் செய்தது அவ்வளவு பாரதூரமானதல்ல என்று காட்டினார்.

"மனிதன் ஓய்வுநாளுக்காக வல்ல, ஓய்வுநாள் மனிதனுக்காக." "உபவாசம் பாவத்தின் சாவு; பரிசுத்தத்தின் தொடக்கம்; கற்பின் அத்திவாரம்" என்றார் அர்ச். அமிர்தநாதர்.

## மறக்க முடியவில்லை

என் தாய் தந்தைக்கு நானும், புவனமலர் என்ற ஒரு சகோதரியும் தான் பிள்ளைகள். நாங்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் காலையும் மாலையும் ஒரு செபமாலை சொல்லி வருவது வழக்கம். தகப்பனும் தாயும் பகல்முழுதும்கஷ்டப்பட்டு வேலைசெய்துவிட்டு வந்தாலும் செபமாலை சொல்லாமல் விட்டது கிடையாது. இப்படிவரும் நாளில் தந்தை நோயினால் பீடிக்கப்பட்டுச் சிறிது நாளின்பின் இறந்துவிட்டார். தந்தை இறந்தாலும் நாங்கள் குடும்ப செபமாலை சொல்லாது விடவில்லை. ஏழைகளாகிய எங்களைத் தயாளமிக்க சருவேசுரன் ஒருவினாடியேனும் கைவிட்டது கிடையாது.

மாதாபேரினால் சொல்லி வருகின்ற செபமாலையினால் எவ்வளவோ நன்மைகள் இவ்வுலகில் மட்டுமல்ல, மறுஉலகிலும் உண்டு என்பதை அறியத் தாய் எங்கள் இருவருக்கும் பலகதைகள் சொல்லுவாள். அன்றியும் மாதத்தின் முதற் சனிக்கிழமை மாதாவின் மாசற்ற இருதயத்திற்கு எங்களை ஒப்புக்கொடுக்கும் நாள் என்று ஓய்வு நேரங்களில் சொல்லி மாதாபேரில் அதிகமாய் அன்புவைக்கச் செய்தாள். இவ்வாறு இருக்கும்போது தாயும் சுரநோயால் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டாள். மரிப்பதற்குச் சிலமணி நேரங்களுக்கு முன் என்னையும், புவனமலரையும் அழைத்துத் தனக்குமுன் தொங்கியிருந்த தேவமாதா படத்தைச் சுட்டிக்காட்டி, "உங்கள் இருவரையும் அன்னையிடத்தில் ஒப்படைக்கிறேன்; என்னிலும் மேலாக உங்களிடத்தில் அன்பு உள்ளவள் அவள்; நீங்கள் ஒருநாளும் தவறாது காலையும் மாலையும் ஒருசெபமாலை சொல்லி ஒப்புக் கொடுப்பதும் அன்றி, 'மிகவும் இரக்கமுள்ள தாயே...' என்ற செபத்தையும் சொல்லவேண்டும்" என்று கூறி என்னைப் பார்த்து, புவனமலரும் நீயும் மணியும் ஒளியும் போல் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று கூறித் தன் ஆத்துமத்தை ஆண்டவனிடத்தில் ஒப்படைத்தாள்.

தாயும் மரித்துப் பத்து வருடங்கள் பறந்தோடின. நாங்கள் இருவரும் காலையும் மாலையும் பத்தியாய்ச் செபமாலை சொல்லி ஒப்புக்கொடாத நாளே கிடையாது. நாங்கள் இருவரும் கூலிக்கு வேலைசெய்து சீவித்து வந்தோம். பின்பு நான் ஒருவீட்டில் சமைத்துக் கொடுப்பதற்குச் சமையல்காரனாக அமர்ந்தேன். அவ்வீட்டுக்காரரோ பிறசமயத்தவர்கள். எசமானோ மிகப் பொல்லாதவன், இரக்கமில்லாதவன், மடித்தவாய் வெடித்த சொல்லான். எங்கள் சத்தியவேதத்தில் விருப்பம் இல்லாதவன். என் செய்வது? பிழைக்க வழியில்லாததினால் அவன் கையில் ஒப்படைக்கப்பட்டேன். நான் வேலைகள் யாவும் முடித்தபின் வீடு சென்று நானும், புவனமலரும் செபமாலை சொல்லி வருவது வழக்கம்.

இப்படி இருக்கும்போது ஒருநாள் எசமான் என்னைப் பார்த்து இனிமேல் நீ ஒருநாளும் வீட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்லி விட்டான். எனக்கோ சொல்லொண்ணாத் துயரம். என் செய்யலாம்? தாயின் கடனை எப்பொழுது தீர்ப்போம் இருவரும் என்ற எண்ணந்தான். கடைக்குச் சாமான் வாங்கப் போகும் போதாவது வீடு சென்று வரலாம் என்று உத்தேசித்து அப்படியே செய்து வந்தேன். அதையும் எசமான் அறிந்து கடைக்குப் போவதையும் மறித்துவிட்டான். எப்படிச் செய்தாலும் காலையும் மாலையும் செபமாலை சொல்லாமல் இருக்க முடியவில்லை. உடனே அவ்வீட்டில் இருந்து விலகி வீடுசென்றேன். புவனமலர் நான் வேலையில் இருந்து விலகி வருவதை அறிந்து, எதற்காக வேலையில் இருந்து விலகினீர்கள் என்று வினவினாள். புவனமலர், நான் என்ன செய்வது? அம்மா பழக்கிய பழக்கத்தினாலும், உன்னோடு கூடிச் சொல்லி வந்த செபத்தினாலும், தேவமாதா பேரில் வைத்த அன்பினாலும் செபமாலை சொல்லி வந்த வழக்கத்தை மறக்க முடியவில்லை.

அன்பான தம்பி, தங்கைச்சிமார்களே! காலையும் மாலையும் உங்கள் வீடுகளில் உள்ள யாவரும் சேர்ந்து வீடுகளில் குடும்ப செபமாலை சொல்லி வாருங்கள். அதனால் எவ்வளவோ நன்மை உண்டு. அன்றியும் உங்களுக்கும், திருச்சபைக்கும் சமாதானம் உண்டாகும்.

பி. திருச்செல்வம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், மரியாயின் மாசற்றஇருதயத்தின் அனுக்கிரகத்தினாலும் அர்ச். சூசையப்பர், அர்ச். யுதாததேயு, அர்ச். ஜியார்ஜ், அர்ச். குழந்தை தெரேசம்மாள், சங். அல்போன்ஸாசகோதரி இவர்களுடைய விசேஷித்த மன்றாட்டினாலும் என் மகன் டைபாயிட் என்ற கொடிய விஷசுரத்தின் ஆபத்தினின்று காப்பாற்றப் பட்டதற்காக என் இதய பூர்வமாக நன்றி சமர்ப்பிக்கின்றேன். இத்தோடு நான்நினைத்த காரியம் அனுகூலமாகும்படியும், என் மூத்த மகனுக்குக் கப்பலில் நல்ல வேலைகிடைத்து அவன் ஆத்தும சரீரத்துக்கு யாதொரு பொல்லாப்பின்றிக் காப்பாற்றித்தரும்படியும் யேசுவின் அன்பு நிறைந்த இருதயத்தின் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

மரியதாஸ் கோமஸ்
கொழும்பு

## அர்ச். பிரான்சீஸ்துவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 28-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். பின் வரும் திகதிகளில் அங்கத்தவர்கள் பரிபூரணபலன்களை அடையலாம்:— 4, 10, 13, 16, 21, 23, 24, 25, 28, 30. மேலும் 6-ம், 7-ம், 8-ம், 9-ம் 10-ம், 11-ம், 12-ம், 13-ம் தேதிகளில்பொதுப் பாவமன்னிப்பும் அடையலாம். கூட்டத்தின் பின் ஆலோசனைச்சங்கம் உடனே நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூசையப்பர் அனுப்பிய வெகுமதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்திருக்கிறேன். ஆனால், அதில் நூதனமாக ஒன்றுமில்லையேஎன எண்ணிக்கொண்டு சுருபத்தைஉற்றுப்பார்த்தேன். ஆம், அதன்கழுத்தில் ஏதோ தொங்கிக்கொண்டுதான் இருந்தது. ஆனால், அது என்னவென்று சரியாய்த்தெரியவில்லை.

"ஆமாம், ஏதோ தொங்கிக் கொண்டுதான் இருக்கிறது. என்னவென்று தெரியவில்லை. தாயார்வரட்டும் கேட்போம்" என்றுகூறிச் செல்வராஜுக்குக் கோவிலைச்சுற்றிக் காட்டிவிட்டு அனாதைமடத்தின் ஏனைய இடங்களைப்பார்க்கக் கூட்டிச் சென்றேன். வழியில் தாயார் வந்தார். எங்களை உபசரிக்குமாறு சம்பாஷணைக்கூடத்திற்கு அழைத்துச்சென்றதும் சூசையப்பர் கழுத்தில் தொங்குவது என்னவென்று விசாரித்தேன்.

தாயார் என்கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆகையால், அவர் சற்றேதிகைத்துவிட்டார். பின் ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு "அது வேறொன்றுமில்லை சுவாமி; அது ஒரு பூசைப்பாத்திரத்தின் மாதிரி; தகரத்தில்செய்தது. நமதுகோவிலில் நல்லொரு பூசைப்பாத்திரம் இல்லாத குறை பெருங்குறையென்பது தங்களுக்கும்தெரியுமே. உங்களுக்குப் பூசைக்குவைக்கிறோமே அந்தப்பழையபாத்திரம் ஒன்றுதான் இருக்கிறது. ஆகையால் எப்படியாவது புதுப்பாத்திரம் ஒன்று வாங்கவேண்டுமென்று நெடுநாளாக என்உள்ளத்தில் ஒருஆவல் குடிகொண்டிருந்தது. ஆனால், பணத்திற்கு எங்கே போவதென்று தெரியவில்லை. அர்ச். சூசையப்பரைப் பிடித்தால் எப்படியும் காரியம்சித்தியாகிவிடும் என்றநம்பிக்கையுடன், மடத்துப் பிள்ளைகளையெல்லாம் இக்கருத்துக்காக மன்றாடிக்கொள்ளும்படி சொல்லியிருந்தேன். இன்றுடன் இரண்டுவாரமாகிறது இந்தக் கருத்துக்காக நாங்கள் மன்றாடத்தொடங்கி. ஆனால், எங்கள் மன்றாட்டு இன்னும் கேட்கப்படவில்லை. ஒருவேளை அர்ச். சூசையப்பர் தமக்குவரும் ஆயிரக்கணக்கான வேண்டுதல்களில் இதை மறந்துபோயிருப்பாரென்று நினைத்து, எங்கள்பிள்ளைகள் தகரத்தில் ஒருபூசைப்பாத்திரம் மாதிரிச்செய்து அவர் கழுத்தில் அதைத்தொங்கவிட்டிருக்கிறார்கள். இது எங்கள் வேண்டுகோளைச் சதாஅவருக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருக்குமாம்"…. என்றுகூறித் தாயார் சிரித்தார். கூடவேநானும், என் நண்பனும் அவ்விஷமச் சிறுமியரின் செயலைநினைத்து விழுந்து விழுந்துசிரித்தோம். பின்னர் உபசரணைமுடிந்து எழுந்தோம். பார்க்கவேண்டிய மற்ற இடங்களையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம். என் நண்பன்செல்வராஜ் அன்றிரவு ஏழுமணிவண்டியில தனதுஊருக்குப் புறப்பட்டுப்போனான்.

பங்குனி மாதம் 18-ந்திகதி. அர்ச். சூசையப்பர் திருநாளுக்கு முந்தினநாள். மடத்துக்கோவிலில் வழக்கம்போல் பூசைசெய்தேன். பூசைமுடிந்தபின் அர்ச். சூசையப்பரின் வல்லமையைப் பற்றி ஒருசிறுபிரசங்கமும் செய்தேன். மறுநாள் மடத்துத்திருநாள். ஆகையால், பிள்ளைகளிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டுவிட்டுக் கோவிலிலிருந்து வெளியே வரும்போது மணி 9-30 இருக்கும். அப்போது தாயார் ஒரு பெரியபார்சலுடன் ஓடிவந்தார். வந்து "சுவாமி! சுவாமி! பாருங்கள் சுவாமி! அர்ச். சூசையப்பர் எங்கள்மன்றாட்டைக் கேட்டுவிட்டார் —பாருங்கள். என்ன அழகான பூசைப்பாத்திரம். யார் அனுப்பியதென்று தெரியவில்லை" என்று ஆச்சரியமும் ஆனந்தமும் கலந்த குரலில் கூறிக்கொண்டே ஒரு தங்கப் பூசைப்பாத்திரத்தை வெளியிலெடுத்தார். என் கண்களை நம்பமுடியவில்லை. பூசைப்பாத்திரத்தைக் கையில்வாங்கிப் பார்த்தேன். அது கண்ணைப் பறித்தது. பெயர் ஏதாவது பாத்திரத்தில் பொறிக்கப்பட்டிருக்குமா என்றுபார்த்தேன். ஆனால், ஒன்றும் காணப்படவில்லை. "பார்சலைச்சரியாய்ச் சோதித்துப்பாருங்கள் தாயாரே! ஒருவேளை ஏதாவதுகடிதம் இருக்கும்" என்றேன். தாயார் பாத்திரம்வந்தபெட்டியிலிருந்த தாள்களை வெளியிலெடுத்தார். கடிதம் ஒன்றுமில்லை. ஆனால், ஏதோ எழுதியிருந்த தாள் அகப்பட்டது. தாயார் ஆவலுடன் அதைவாசித்தார்: "அர்ச். சூசையப்பர் அனுப்பும் வெகுமதி. உங்கள் மன்றாட்டை அவர்மறக்கவில்லை." தாயாரின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளித்தது. அவர்உள்ளம் அர்ச். சூசையப்பருக்கு நன்றிசெலுத்திக் கொண்டிருக்கிறதுஎன்று அவர் முகம்காட்டியது. நானும்அவர்களோடுசேர்ந்து நல்ல தந்தை சூசையப்பருக்கு நன்றிசெலுத்தினேன். அதன்பின் தாயார் என்னைப்பார்த்து, "சுவாமி! இதை அனுப்பினது யாராக இருக்கலாம்? தெரிந்தால் அப்பேருபகாரிக்கு நன்றிகூறி ஒரு கடிதம் எழுதலாமல்லவா?" என்றார்.

"அப்பேருபகாரி வேறுயாருமில்லை. எனதுகலாசாலைநண்பன் செல்வராஜ்தான். இதோ, தபால்முத்திரையைப் பாருங்கள். பார்சல் திருச்சியிலிருந்து வந்திருக்கிறது. நமக்குப் பூசைப்பாத்திரம்ஒன்று தேவையெனத் திருச்சியில் அவனைத் தவிர வேறுயாருக்குத்தெரியும்? அதுவுமன்றிக் கையெழுத்தும் அவன் கையெழுத்துதான். ஆகையால் சந்தேகமின்றி அவன்தான் அனுப்பியிருக்கிறான். அவனுக்கே கடிதம்எழுதிவிடுங்கள் நன்றிகூறி. இதோ அவன்விலாசம்" என்றுகூறி அவன்விலாசத்தையும் எழுதிக் கொடுத்தேன். தாயாருக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. "அப்படியா சுவாமி! உங்கள்நண்பரா அனுப்பியிருக்கிறார். எவ்வளவுநல்லவர் அவர். அர்ச். சூசையப்பர் அவரை ஆசீர்வதிப்பாராக" என்றுகூறினார் உவகைபொங்கும் உள்ளத்துடன்.

## யாருக்கு ஒருசந்தி

நாங்கள் அனுதினமும் கடினவேலை செய்து எங்கள்ஜீவனத்தைத் தேடவேண்டியிருப்பதால் எங்களுக்கு ஒருசந்திகாக்கக் கடமையில்லை என்பார்கள் தொழிலாளிகள்.

நாங்கள் நாள்தோறும் வீட்டுவேலை, சமையல்வேலைமுதலியனசெய்து களைப்படைவதால் எங்களுக்கு ஒருசந்திகாக்கக் கடமையில்லை என்பார்கள். பெண்தொழிலாளிகள்.

நாங்கள் தினந்தோறும் கந்தோர் சென்று கதிரையிலிருந்து, கரத்தில் எழுதுகோல்பற்றி மூளைகளைக்க வேலைசெய்வதால் எங்களுக்கு ஒருசந்திகாக்கக் கடமையில்லை என்பார்கள் உத்தியோகஸ்தர்கள்.

நாங்கள் பாடசாலைவேலையோடு தொண்டைத்தண்ணீர் வற்றக் கத்திக் களைப்படைவதால் எங்களுக்கென்ன ஒருசந்திக்கடமைஎன்பார்கள் ஆசிரியத் தொழில் பார்ப்பவர்கள்.

இப்படியாக ஒவ்வொருவரும் "முடக்கழுதைக்குச் சறுக்கியதுசாட்"டாகச் சாட்டுச் சொல்லிக்கொண்டேபோனால் திருச்சபையின்கட்டளைப்படி 21 வயதுக்குமேற்பட்டவர்களும், 60 வயதுக்குட்பட்டவர்களும் ஒருசந்திகாக்கக் கடமையற்றவர்களாகிவிட்டால் ஒருசந்தி பிடிப்பவர்கள்தான் யாரோ?

ஆனால், பழையபக்தியுள்ள வேதக்காரரும், ஒருசந்தியைத் தக்கமுறையாகப் பிடித்துப் பழகியவர்களும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுமாகிய கிழவர்கிழவிகள்தான் தங்கள் வயோதிபத்தையும், தபத்தின் அவசியத்தையும் உணர்ந்து ஒருசந்திகாக்க மனமுடையவர்களாய் இருக்கிறார்கள்.

## திரு. டானியேல் ரேச்

நமதுதாயாகிய திருச்சபை காலப்போக்கையும், மனிதர்நிலைமையையும் உத்தேசித்துச் சிலபல இளக்காரங்களைக் காண்பித்திருந்தாலும் மனிதராய்ப்பிறந்தசகலரும் தங்கள் பாவத்துக்குப் பரிகாரமாகத் தபஞ்செய்ய வேண்டாமென்று ஒருபோதும்சொல்வதில்லை.

ஆனால், பாவத்தின்மேல் பாவத்தைக் கட்டிக்கொள்ளும் ஆண்களும் பெண்களும் — தபத்தின்மேல் தபத்தைச் செய்யவேண்டிய ஆண்களும் பெண்களும் திருச்சபைச்சட்டத்தைத் தங்கள் பாவப்போக்கிற்கேற்ப வியாக்கியானம் செய்துகொண்டு பசியையும் கள்ளத்தனமாகப் போக்கடித்துத் தாங்களும் தபம்செய்வதாக நடித்துத் தங்கள்மனச்சாட்சிக்கும் கபடக் கவசமணிந்து கடவுளையும்ஏமாற்றத்துணிந்துவிடுகிறார்கள்.

சரீரநோய்கள் தீரவும், அழகும் இன்பமும்பெறவும் வைத்தியர் பத்துநாட் பத்தியங்காக்கச் சொன்னாலும் செய்யப்பின்னில்லாதபலர் ஆன்மவைத்தியர்கள் வாரத்திற்குஒருமுறை தபமென்றமருந்து செய்யும்படி கட்டளையிட்டால் அதுமிகவும் களையும், பெலவீனமும் உண்டாக்கிவிடுமென ஏங்கிப் போகிறார்கள். திருச்சபையின் கட்டளைகள் பலவற்றுள் சுகாதாரமுறையும் தழுவப்பட்டுள்ளதென்பதைப் பலர் உணர்வதில்லை.

மனிதபடைப்பினர்களாகிய நாம் நம்மைப்படைத்துக் காத்துவரும் பரம்பொருளாகிய கடவுளின்பக்கமுள்ள முகத்தைத்திருப்பிச் சிருஷ்டிகளின் பக்கமாக நோக்கிக்கொண்டிருப்பதே பாவமாகும். மனிதமுகங்களைத் திரும்பவும் கடவுள்பக்கம்திருப்ப உதவுவதுதான் தபமாகும்.

ஒவ்வோர் மனிதனும் பலவிதமான பாவக்கயிறுகளால் கட்டப்பட்டிருக்கிறான். அவன் தன்னைக்கட்டியுள்ள பாவபாசங்களை ஓர் விதமாக அறுத்தாலும் காமபாசமென்ற கம்பாங்கயிற்றின் கட்டுகளை அறுப்பது மிகமிகக் கடினமாகும்.

காமபாசத்தை அறுக்க வேண்டுமானால் தபம்அவசியம். தபம்செய்தே தீரவேண்டும். தன் இறக்கைகளை அடித்துக்கொண்டு ஆகாயவெளிகளிற் சுயாதீனமாகப் பறந்துதிரியும் ஓர் பறவையானது கண்ணிகளிற் கால்சிக்கியபின் எப்படித் தன்சுயாதீனத்தைப் பறிகொடுத்திருக்குமோ அதேபோன்றுதான் காமபாசக்கண்ணிகளில் அகப்பட்டமனிதனும் சுயாதீனமாகத் தபஞ்செய்யமுடியாமல் இருக்கிறான்.

நினிவேபட்டணத்துச் சனங்களை அழிக்கத்துணிந்ததேவன் அவர்களின் தபத்தைக்கண்டு மனமிளகித் தமது தீர்ப்பை மாற்றிக்கொண்டார் என்று வேதபுத்தகங்கூறுகின்றது. பலர் ஒருசந்தியென்று நினைத்தாலே தேகத்தில் ஓர்களைப்பு, மனத்தில் ஓர் பெலவீனம். இந்நிலைகளைக்கண்டு பயப்பட்டால் தபஞ்செய்வது எப்படி? ஒருசந்திபிடித்துஉயிர்மாண்டதாக உலகில்யாருமே கேள்விப்பட்டதில்லை. ஆனால், உணவு சமியாமல் எத்தனையோபேர் மாண்டுமடிந்தனர் என்பதை நாம் அறிவோமல்லவா?

## சுதேச வர்த்தமானம்

### கொழும்புப் பொருட்காட்சி

மிகப்பேராய் நடந்துவருகின்ற கொழும்புப்பொருட்காட்சி இம்மாதம் 23-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைமுடிவாகும். அக்காட்சிக்கு அனுமதிச்சீட்டுகளின் விற்பனைமூலம் சென்றதிங்கட்கிழமைவரை எட்டுலட்சம்ரூபா சேர்ந்திருக்கிறது. காட்சிமுடிவுக்குவரும்போது பத்துலட்சம்ரூபா சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. மறுநாளாகிய 24-ந்திகதி திங்கட்கிழமை சுவீப்டிக்கெற்றுகள் உருட்டப்படும். அதன் முடிவுஒலிபரப்பிமூலம் இலங்கைமுழுவதும் அறிவிக்கப்படும்.

### அரிசி இறக்குமதி

பர்மா நிகழும்வருடத்திலே இலங்கைக்கு 80,000தொன் அரிசி ஒதுக்கியிருக்கிறது. இந்தஅரிசி சென்றசெவ்வாய்க்கிழமை கொழும்புவந்து சேரவிருந்தது. அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து 1,500தொன் அரிசி இன்று கொழும்புவந்து சேரவிருக்கிறது. அநேகநாடுகளிலிருந்து அரிசிகிடைக்கக்கூடிய நிலைமைஏற்பட்டிருப்பதாலே இலங்கைக்குத்தேவையான அரிசியை எந்தநாட்டிலிருந்தும் கொள்வனவு செய்ய நமது அரசினர் தீர்மானித்திருக்கின்றனர்.

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 21 | அ. ஆசீர்வாதப்பர் | (வெ) |
| சனி | 22 | அ. கத்தரீனம்மாள் | (ஊ) |
| ஞா | 23 | தபசுகால 4-ம் ஞாயிறு — அ. விக்தோரப்பர் | (ஊ) |
| திங் | 24 | அ. கபிரிகேல் அதிதூதர் | (வெ) |
| செ | 25 | தேவமாதாவுக்கு, சம்மனசு மங்களஞ்சொன்ன திருநாள் | (வெ) |
| புத | 26 | அ. கஸ்துலப்பர் | (ஊ) |
| வி | 27 | அ. தமசீனு அருளப்பர் | (வெ) |

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 20-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org